

தமிழ்நாடு அரசு

ஏழாம் வகுப்பு

இரண்டாம் பருவம்

தொகுதி – 1

தமிழ்

ENGLISH

தமிழ்நாடு அரசு விலையில்லாப் பாடநூல் வழங்கும் திட்டத்தின்கீழ் வெளியிடப்பட்டது

பள்ளிக் கல்வித்துறை

தீண்டாமை மனிதநேயமற்ற செயலும் பெருங்குற்றமும் ஆகும்

தமிழ்நாடு அரசு

முதல் பதிப்பு – 2019

திருத்திய பதிப்பு – 2020, 2021, 2022, 2023, 2025

மறுபதிப்பு – 2024

(புதிய பாடத்திட்டத்தின்கீழ்
வெளியிடப்பட்ட முப்பருவநூல்)

விற்பனைக்கு அன்று

பாடநூல் உருவாக்கமும் தொகுப்பும்

மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம்
© SCERT 2019
நூல் அச்சாக்கம்

தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம்

www.textbooksonline.tn.nic.in

ஓர் அழைப்பு உங்கள் வாழ்க்கையை மாற்றும் (18 வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கான 24×7 கட்டணமில்லாத் தொலைபேசி எண்கள்)

குழந்தைத் திருமணம், குழந்தைத் தொழிலாளர் போன்ற பாதிப்புகளுக்கு உள்ளாக்கப்படுகிறீர்களா?
மனம், உடல் மற்றும் பாலியல் சார்ந்த துன்புறுத்தலுக்கு உள்ளாக்கப்படுகிறீர்களா?
பாதுகாப்பற்ற சூழலில் உள்ளீர்களா?
அழையுங்கள் குழந்தை உதவி எண் 1098
உங்கள் விவரங்கள் பிறருக்குத் தெரியாமல் பாதுகாக்கப்படும்

CHILD LINE 1098 NIGHT & DAY

மனம், உடல் மற்றும் பாலியல் சார்ந்த துன்புறுத்தலுக்கு அல்லது அச்சுறுத்தலுக்கு உள்ளாக்கப்படுகிறீர்களா?
பாதுகாப்பற்ற சூழலில் உள்ளீர்களா?
தேர்வு மற்றும் உயர்கல்விக்கு வழிகாட்டுதல் தேவையா?
அழையுங்கள் 14417
உங்கள் விவரங்கள் பிறருக்குத் தெரியாமல் பாதுகாக்கப்படும்

14417
கல்வித் தகவல் மையம்

7th Std - Tamil_2025_Term_II_FM.indd 2 6/11/2025 4:48:45 PM

இந்திய அரசமைப்பு

முகப்புரை

இந்திய மக்களாகிய நாம், இந்திய நாட்டினை **இறையாண்மையும் சமநலச்சமுதாயமும் சமயச்சார்பின்மையும் மக்களாட்சிமுறையும்** அமைந்ததொரு **குடியரசாக நிறுவவும்,**

அதன் குடிமக்கள் அனைவரும்

சமுதாய, பொருளியல், அரசியல், **நீதி;**

எண்ணம், அதன் வெளியீடு, கோட்பாடு,

சமயநம்பிக்கை, வழிபாடு இவற்றில் **தன்னுரிமை;**

சமுதாயப்படிநிலை, வாய்ப்புநலம் இவற்றில் **சமன்மை**

ஆகியவற்றை எய்திடச் செய்யவும்;

அவர்கள் அனைவரிடையேயும்

தனி மனிதனின் மாண்பு, நாட்டுமக்களின் ஒற்றுமை,

ஒருமைப்பாடு இவற்றை உறுதிப்படுத்தும்

உடன்பிறப்புரிமையினை வளர்க்கவும்;

உள்ளார்ந்த உறுதியுடையராய்,

நம்முடைய அரசமைப்புப் பேரவையில், 1949 நவம்பர் இருபத்தாறாம் நாளாகிய இன்று, **ஈங்கிதனால், இந்த அரசமைப்பினை ஏற்று, இயற்றி, நமக்கு நாமே வழங்கிக்கொள்கிறோம்.**

7th Std - Tamil_2025_Term_II_FM.indd 3 6/11/2025 4:48:45 PM

முகவுரை

கல்வி, அறிவுத் தேடலுக்கான பயணம் மட்டுமல்ல; எதிர்கால வாழ்விற்கு அடித்தளம் அமைத்திடும் கனவின் தொடக்கமும்கூட. அதே போன்று, பாடநூல் என்பது மாணவர்களின் கைகளில் தவழும் ஒரு வழிகாட்டி மட்டுமல்ல; அடுத்த தலைமுறை மாணவர்களின் சிந்தனைப் போக்கை வடிவமைத்திடும் வல்லமை கொண்டது என்பதையும் உணர்ந்துள்ளோம். பெற்றோர், ஆசிரியர் மற்றும் மாணவரின் வண்ணக் கனவுகளைக் குழைத்து ஓர் ஓவியம் தீட்டியிருக்கிறோம். அதனூடே கீழ்க்கண்ட நோக்கங்களையும் அடைந்திடப் பெருமுயற்சி செய்துள்ளோம்.

- கற்றலை மனனத்தின் திசையில் இருந்து மாற்றிப் படைப்பின் பாதையில் பயணிக்க வைத்தல்.
- தமிழர்தம் தொன்மை, வரலாறு, பண்பாடு மற்றும் கலை, இலக்கியம் குறித்த பெருமித உணர்வை மாணவர்கள் பெறுதல்.
- தன்னம்பிக்கையுடன் அறிவியல் தொழில்நுட்பம் கைக்கொண்டு மாணவர்கள் நவீன உலகில் வெற்றிநடை பயில்வதை உறுதிசெய்தல்.
- அறிவுத்தேடலை வெறும் ஏட்டறிவாய்க் குறைத்து மதிப்பிடாமல் அறிவுச் சாளரமாய்ப் புத்தகங்கள் விரிந்து பரவி வழிகாட்டுதல்.
- தோல்வி பயம் மற்றும் மன அழுத்தத்தை உற்பத்தி செய்யும் தேர்வுகளை உருமாற்றி, கற்றலின் இனிமையை உறுதிசெய்யும் தருணமாய் அமைத்தல்.

புதுமையான வடிவமைப்பு, ஆழமான பொருள் மற்றும் குழந்தைகளின் உளவியல் சார்ந்த அணுகுமுறை எனப் புதுமைகள் பல தாங்கி உங்களுடைய கரங்களில் இப்புதிய பாடநூல் தவழும்பொழுது, பெருமிதம் ததும்ப ஒரு புதிய உலகத்துக்குள் நீங்கள் நுழைவீர்கள் என்று உறுதியாக நம்புகிறோம்.

7th Std - Tamil_2025_Term_II_FM.indd 4 6/11/2025 4:48:46 PM

நாட்டுப்பண்

ஜன கண மன அதிநாயக ஜய ஹே
பாரத பாக்ய விதாதா
பஞ்சாப ஸிந்து குஜராத மராட்டா
திராவிட உத்கல பங்கா
விந்திய ஹிமாசல யமுனா கங்கா
உச்சல ஜலதி தரங்கா
தவ சுப நாமே ஜாகே
தவ சுப ஆசிஸ மாகே
காஹே தவ ஜய காதா
ஜன கண மங்கள தாயக ஜய ஹே
பாரத பாக்ய விதாதா
ஜய ஹே ஜய ஹே ஜய ஹே
ஜய ஜய ஜய ஜய ஹே!

– மகாகவி இரவீந்திரநாத தாகூர்.

நாட்டுப்பண் – பொருள்

இந்தியத் தாயே! மக்களின் இன்ப துன்பங்களைக் கணிக்கின்ற நீயே எல்லாருடைய மனத்திலும் ஆட்சி செய்கிறாய்.

நின் திருப்பெயர் பஞ்சாபையும், சிந்துவையும், கூர்ச்சரத்தையும், மராட்டியத்தையும், திராவிடத்தையும், ஒடிசாவையும், வங்காளத்தையும் உள்ளக் கிளர்ச்சி அடையச் செய்கிறது.

நின் திருப்பெயர் விந்திய, இமயமலைத் தொடர்களில் எதிரொலிக்கிறது; யமுனை, கங்கை ஆறுகளின் இன்னொலியில் ஒன்றுகிறது; இந்தியக் கடலலைகளால் வணங்கப்படுகிறது.

அவை நின்னருளை வேண்டுகின்றன; நின் புகழைப் பரவுகின்றன.

இந்தியாவின் இன்ப துன்பங்களைக் கணிக்கின்ற தாயே!

உனக்கு வெற்றி! வெற்றி! வெற்றி!




7th Std - Tamil_2025_Term_II_FM.indd 5 6/11/2025 4:48:47 PM

தமிழ்த்தாய் வாழ்த்து

நீராருங் கடலுடுத்த நிலமடந்தைக் கெழிலொழுகும்
சீராரும் வதனமெனத் திகழ்பரதக் கண்டமிதில்
தெக்கணமும் அதிற்சிறந்த திராவிடநல் திருநாடும்
தக்கசிறு பிறைநுதலும் தரித்தநறுந் திலகமுமே!
அத்திலக வாசனைபோல் அனைத்துலகும் இன்பமுற
எத்திசையும் புகழ்மணக்க இருந்தபெருந் தமிழணங்கே!
தமிழணங்கே!
உன் சீரிளமைத் திறம்வியந்து செயல்மறந்து வாழ்த்துதுமே!
வாழ்த்துதுமே!
வாழ்த்துதுமே!

– 'மனோன்மணீயம்' பெ. சுந்தரனார்.



தமிழ்த்தாய் வாழ்த்து – பொருள்

ஒலி எழுப்பும் நீர் நிறைந்த கடலெனும் ஆடையுடுத்திய நிலமெனும் பெண்ணுக்கு, அழகு மிளிரும் சிறப்பு நிறைந்த முகமாகத் திகழ்கிறது பரதக்கண்டம். அக்கண்டத்தில், தென்னாடும் அதில் சிறந்த திராவிடர்களின் நல்ல திருநாடும், பொருத்தமான பிறை போன்ற நெற்றியாகவும், அதிலிட்ட மணம் வீசும் திலகமாகவும் இருக்கின்றன.

அந்தத் திலகத்தில் இருந்து வரும் வாசனைபோல, அனைத்துலகமும் இன்பம் பெறும் வகையில் எல்லாத் திசையிலும் புகழ் மணக்கும்படி (புகழ் பெற்று) இருக்கின்ற பெருமைமிக்க தமிழ்ப் பெண்ணே! தமிழ்ப் பெண்ணே! என்றும் இளமையாக இருக்கின்ற உன் சிறப்பான திறமையை வியந்து உன் வயப்பட்டு எங்கள் செயல்களை மறந்து உன்னை வாழ்த்துவோமே! வாழ்த்துவோமே! வாழ்த்துவோமே!

7th Std - Tamil_2025_Term_II_FM.indd 6 6/11/2025 4:48:47 PM



தேசிய ஒருமைப்பாட்டு உறுதிமொழி

'நாட்டின் உரிமை வாழ்வையும் ஒருமைப்பாட்டையும் பேணிக்காத்து வலுப்படுத்தச் செயற்படுவேன்' என்று உளமார நான் உறுதி கூறுகிறேன்.

'ஒருபோதும் வன்முறையை நாடேன் என்றும் சமயம், மொழி, வட்டாரம் முதலியவை காரணமாக எழும் வேறுபாடுகளுக்கும் பூசல்களுக்கும் ஏனைய அரசியல் பொருளாதாரக் குறைபாடுகளுக்கும் அமைதி நெறியிலும் அரசியல் அமைப்பின் வழியிலும் நின்று தீர்வு காண்பேன்' என்றும் நான் மேலும் உறுதியளிக்கிறேன்.

உறுதிமொழி

இந்தியா எனது நாடு. இந்தியர் அனைவரும் என் உடன் பிறந்தவர்கள். என் நாட்டை நான் பெரிதும் நேசிக்கிறேன். இந்நாட்டின் பழம்பெருமைக்காகவும் பன்முக மரபுச் சிறப்புக்காகவும் நான் பெருமிதம் அடைகிறேன். இந்நாட்டின் பெருமைக்குத் தகுந்து விளங்கிட என்றும் பாடுபடுவேன்.

என்னுடைய பெற்றோர், ஆசிரியர்கள், எனக்கு வயதில் மூத்தோர் அனைவரையும் மதிப்பேன்; எல்லாரிடமும் அன்பும் மரியாதையும் காட்டுவேன்.

என் நாட்டிற்கும் என் மக்களுக்கும் உழைத்திட முனைந்து நிற்பேன். அவர்கள் நலமும் வளமும் பெறுவதிலேதான் என்றும் மகிழ்ச்சி காண்பேன்.



7th Std - Tamil_2025_Term_II_FM.indd 7 6/11/2025 4:48:47 PM

உலகின் மூத்த மொழியாம் தமிழின் பல்வேறு பரிமாணங்களை
இன்றைய இளம்தலைமுறைக்கு
அறிமுகப்படுத்தும் ஒரு துணைக்கருவியாக இப்பாடநூல்.



ஒவ்வோர் இயலையும் ஆர்வத்துடன்
அணுக உரைநடைஉலகம்,
கவிதைப்பேழை, விரிவானம்,
கற்கண்டு
ஆகிய தலைப்புகளாக . . . . .



பொருண்மைக்கு ஏற்ப
இயலின் தொடக்கத்தில்
கற்றல் நோக்கங்கள்



பாடப்பகுதிகளின்
கருத்தை விளக்க அரிய,
புதிய செய்திகளை
அறிந்து கொள்ள
தெரிந்து தெளிவோம். . . .

ஆளுமை மிக்க
ஆசிரியர்களுக்கும்
ஆற்றல் நிறை
மாணவர்களுக்கும்...



இயலின் இறுதியில்
விழுமியப் பக்கமாக
நிற்க அதற்குத் தக. . .



பயின்ற பாடங்கள் குறித்துச்
சிந்திக்க, கற்றல்
செயல்பாடுகளாகக்
கற்பவை கற்றபின் . . . .

உயர்சிந்தனைத் திறன்பெற,
படைப்பாக்கத்தின்வழி
வாழ்வைத் தன்னம்பிக்கையுடன்
எதிர்கொள்ள, படித்துச்சுவைக்க,
மொழியோடு விளையாடு . . . .



இலக்கியச்சுவை உணர்ந்து
நுட்பங்களை உள்வாங்கி
மொழியை ஆற்றலுடன்
பயன்படுத்த
மொழியை ஆள்வோம் . . . .



மாணவர்தம்
அடைவை அளவிட
மதிப்பீடு . . . .



மொழிப்பாடத்தை மட்டுமல்லாமல் பிறபாடங்களைப் பயில,
கருத்துகளைப் புரிந்து எதிர்வினையாற்ற உதவும் ஏணியாய்….. புதிய வடிவம், பொலிவான
உள்ளடக்கத்துடன் இப்பாடநூல் உங்கள் கைகளில்...

7th Std - Tamil_2025_Term_II_FM.indd 8 6/11/2025 4:48:48 PM

பொருளடக்கம்

வ.எண்	பொருண்மை/இயல்	பாடத்தலைப்புகள்	பக்க எண்	மாதம்
1	கல்வி	அழியாச் செல்வம் *	2	
		தேயிலைத் தோட்டப் பாட்டு	4	
	ஒதுவது ஒழியேல்	வாழ்விக்கும் கல்வி	7	அக்டோபர்
		பள்ளி மறுதிறப்பு	12	
		இலக்கியவகைச் சொற்கள்	15	
2	கலை, அழகியல்	பூத்தொடுத்தல்	22	
		பேசும் ஓவியங்கள்	24	
	கலைவண்ணம்	தமிழ் ஒளிர் இடங்கள்	29	நவம்பர், டிசம்பர்
		தொழிற்பெயர்	35	
		திருக்குறள் *	40	

*(*) இக்குறியிட்ட பாடல்கள் மனப்பாடப்பகுதி*

8B4X9

மின் நூல்

ZFWK4

மதிப்பீடு

7th Std - Tamil_2025_Term_II_FM.indd 9 6/11/2025 4:48:48 PM

ஏழாம் வகுப்பு

இரண்டாம் பருவம்

தொகுதி – 1

தமிழ்

7th Std - Tamil_2025_Term_II_FM.indd 10 6/11/2025 4:48:48 PM

இயல் ஒன்று

ஓதுவது ஒழியேல்

7IPU6



கற்றல் நோக்கங்கள்

- கல்வியே அனைத்திற்கும் அடிப்படை என்பதனை உணர்தல்
- தமிழரின் புலம்பெயர் வாழ்வையும் அதற்கான காரணங்களையும் அறிய முற்படுதல்
- கல்வியின் பலவகைத் துறைகளைப் பற்றி அறிதல்
- கதை படிக்கும் ஆர்வத்தை உருவாக்குதல்
- மொழியில் பயன்படுத்தப்படும் இலக்கிய வகைச் சொற்களைக் கண்டறிதல்

7th Std - Tamil_2025_Term_II_Unit 1.indd 1 6/6/2025 12:28:52 PM

கவிதைப்பேழை

இயல் ஒன்று

அழியாச் செல்வம்



பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளுக்குப் பல்வகையான செல்வங்களைச் சேர்த்து வைக்கின்றனர். அவற்றுள் சில செல்வங்கள் களவு போகவோ, அழியவோ கூடும். ஆகையால் பெற்றோர் தம் குழந்தைகளுக்குச் சேர்த்து வைக்க வேண்டிய செல்வங்களுள் சிறந்ததும், அழியாததும் ஆகிய செல்வத்தைப் பற்றி அறிவோம்.

வைப்புழிக் கோட்படா; வாய்த்தீயிற் கேடில்லை;
மிக்க சிறப்பின் அரசர் செறின்வவ்வார்
எச்சம் எனவொருவன் மக்கட்குச் செய்வன
*விச்சைமற்று அல்ல பிற.**

–சமண முனிவர்

சொல்லும் பொருளும்

வைப்புழி	–	செல்வம் சேமித்து வைக்கும் இடம்
கோட்படா	–	ஒருவரால் கொள்ளப்படாது
வாய்த்து ஈயில்	–	பெறும்படி கொடுத்தாலும்
விச்சை	–	கல்வி
வவ்வார்	–	கவர முடியாது
எச்சம்	–	செல்வம்

பாடலின் பொருள்

கல்வியைச் செல்வம் போல வைத்திருப்பினும் அது பிறரால் கொள்ளப்பட முடியாது. ஒருவர் பெறும்படி கொடுத்தாலும் குறைவுபடாது. மிக்க சிறப்பினை உடைய அரசராலும் கவர முடியாது. ஆதலால் ஒருவர் தம் குழந்தைகளுக்குச் சேர்த்து வைக்க வேண்டிய செல்வம் கல்வியே ஆகும். மற்றவை செல்வம் ஆகா.



நூல் வெளி

நாலடியார் சமண முனிவர்கள் பலரால் எழுதப்பட்ட நூலாகும். இந்நூல் பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்றாகும். இது நானூறு வெண்பாக்களால் ஆனது. இந்நூலை நாலடி நானூறு என்றும், வேளாண்வேதம் என்றும் அழைப்பர். திருக்குறள் போன்றே அறம், பொருள், இன்பம் என்னும் முப்பால் பகுப்புக் கொண்டது. இந்நூல் திருக்குறளுக்கு இணையாக வைத்துப் போற்றப்படுவதை நாலும் இரண்டும் சொல்லுக்குறுதி என்னும் தொடர் மூலம் அறியலாம்.

7th Std - Tamil_2025_Term_II_Unit 1.indd 2 6/6/2025 12:28:52 PM

கற்பவை கற்றபின்

1. கல்வியின் சிறப்பை விளக்கும் பிற பாடல்களைத் திரட்டி எழுதுக.
2. கல்வியின் சிறப்பை விளக்கும் கதை ஒன்றனை அறிந்து வந்து வகுப்பறையில் கூறுக.
3. பின்வரும் பாடலைப் படித்து மகிழ்க.

வெள்ளத்தால் அழியாது வெந்தணலால்
வேகாது வேந்த ராலும்
கொள்ளத்தான் முடியாது கொடுத்தாலும்
நிறைவன்றிக் குறைவு றாது
கள்ளர்க்கோ பயமில்லை காவலுக்கு
மிகஎளிது கல்வி யென்னும்
உள்ளபொருள் உள்ளிருக்கப் புறத்தேயோர்
பொருள்தேடி உழல்கின் றீரே

– தனிப்பாடல் திரட்டு.

மதிப்பீடு

சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. ஒருவர் தம் குழந்தைகளுக்குச் சேர்த்து வைக்க வேண்டிய செல்வம் _____.
   அ) வீடு ஆ) கல்வி இ) பொருள் ஈ) அணிகலன்
2. கல்வியைப் போல் _____ செல்வம் வேறில்லை.
   அ) விலையில்லாத ஆ) கேடில்லாத இ) உயர்வில்லாத ஈ) தவறில்லாத
3. 'வாய்த்தீயின்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது _____.
   அ) வாய்த்து + ஈயின் ஆ) வாய் + தீயின் இ) வாய்த்து +தீயின் ஈ) வாய் + ஈயின்
4. 'கேடில்லை' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது _____.
   அ) கேடி + இல்லை ஆ) கே +இல்லை
   இ) கேள்வி + இல்லை ஈ) கேடு + இல்லை
5. எவன் + ஒருவன் என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் _____.
   அ) எவன்ஒருவன் ஆ) எவன்னொருவன்
   இ) எவனொருவன் ஈ) ஏன்னொருவன்

குறுவினா

கல்விச் செல்வத்தின் இயல்புகளாக நாலடியார் கூறும் செய்திகளை எழுதுக.

சிறுவினா

கல்விச் செல்வம் குறித்து நாலடியார் கூறும் கருத்துகளைத் தொகுத்து எழுதுக.

சிந்தனை வினா

'கல்விச் செல்வம் அழியாத செல்வம்' எனப்படுவது ஏன்? – சிந்தித்து எழுதுக.

7th Std - Tamil_2025_Term_II_Unit 1.indd 3 6/6/2025 12:28:52 PM

இயல் ஒன்று

தேயிலைத் தோட்டப் பாட்டு

நுழையும்முன்

19ஆம் நூற்றாண்டில் ஏற்பட்ட பஞ்சம் காரணமாகத் தமிழர்கள் ஆங்கிலேயரின் குடியேற்ற நாடுகளுக்குப் பிழைக்கச் சென்றனர். அங்குக் கரும்புத் தோட்டத் தொழிலாளர்களாகவும் தேயிலைத் தோட்டக் கூலிகளாகவும் துன்புற்றனர். அவர்களது துன்பத்திற்குக் காரணம் என்ன என்பதையும் அதிலிருந்து விடுபடுவதற்கான வழியையும் கூறும் கவிதை ஒன்றை அறிவோம் வாருங்கள்!

நாகரீ கத்திலும் ராஜரீ கத்திலும்
நாடெங்கும் எந்நாளும் கொண்டாடிட – அருஞ்
சேகரம் போலச் சிறந்து விளங்கிடும்
செல்வம் மலிந்த திருநாடு

இத்தகைச் சீரும் சிறப்பும் கொண்டநமது
இந்திய தேசத்தில் அன்னியர்கள்– நடு
மத்தியில் வந்துகுடி புகுந்து வரு
மானம் கொடுத்து ரட்சித்து வரும்

கைத்தொழில் யாவையும் கொஞ்சம் கொஞ்சமாகக்
காத்திருந்து சமயம் பார்த்து –உள்ள
அத்தனையும் கொள்ளை யிட்டுக் கொண்டுநம்மை
அற்பப் பிராணி போல் செய்ததினால்

உண்டு பிறந்து வளர்ந்த இடந்தனில்
உற்ற பலவித வேலை செய்து – நாம்
பெண்டு பிள்ளையுடன் கஷ்டப் பட்டுத்தினம்
பேயினும் நாயினும் கீழாகினம்

ஒன்றுக்குப் பத்துநூறா யிரமாகவே
ஒவ்வொரு கூலி ஜனங்கள்மீதும்–மிகத்
தண்டு முண்டுமாய்க் கணக்கு எழுதி அவர்
சாகும் வரைக்குந் தலைச் சுமையாய்

பற்றுவரவு குறிப்புப் பேரேட்டினில்
பாக்கி இருக்கும்படி எழுதி–அவர்
சற்றும் தயவும் இல்லாமலே கூலி
ஜனங்களைக் கப்பலிலே ஏற்றி



அக்கரை தேசத்தின் லங்கைத் தீவுக்குள்ளே
அந்தமான் தீவு போன்ற இடத்தில் –மிகச்
சிக்கன மாகவே வெள்ளையர் தங்களின்
தேயிலைத் தோட்டத்தில் சேர்த்திடுவார்

உண்ண உணவுக்கும் உள்ள செலவுக்கும்
ஒவ்வொரு நாளும் அரிதாகி–சிறு
மண்ணுளிப் பாம்புபோல் பெண்டு பிள்ளையுடன்
வாழ்ந்து வருவதைக் காணீரோ!

இப்படிச் சென்று அந்தத் தேயிலைத் தோட்டத்தில்
இந்தியர் துன்பப் படுவதற்கு–மனது
ஒப்பிய கல்வியொழுக்கம் நாகரீகம்
ஒன்றேனும் இல்லாக் குறையெனவே

இன்றேனும் கண்டு உங்கள் பிள்ளைகளுக்கெல்லாம்
ஏற்றமுள்ள கல்வியைப் புகட்டி–நீங்கள்
ஒன்றும் குறையில்லா ஒற்றுமையாகவே
ஊரில் கட்டுப்பாடு செய்குவீரே!

– முகம்மது இராவுத்தர்

7th Std - Tamil_2025_Term_II_Unit 1.indd 4 6/6/2025 12:28:53 PM

சொல்லும் பொருளும்

ராஜரீகம்	–	ஆட்சிமுறை	அருஞ்சேகரம்	–	அரிய சேமிப்பு
ரட்சித்து	–	காப்பாற்றி	தயவு	–	இரக்கம்
பிராணி	–	விலங்கு	லங்கைத்தீவு	–	இலங்கை
பாக்கி	–	கடன்	கட்டுப்பாடு	–	உறுதி

பாடலின் பொருள்

நாகரிகத்திலும் ஆட்சி முறையிலும் பிற நாடுகளும் பாராட்டுமாறு அரிய சேமிப்புப் போல் அமைந்த செல்வங்கள் நிறையப் பெற்றுச் சிறந்து விளங்கியது இந்திய நாடு. இத்தகைய சிறப்புமிக்க நம் நாட்டில் வெளிநாட்டார் வந்து புகுந்தனர். மக்களுக்கு வருமானம் தந்து அவர்களைக் காப்பாற்றி வந்த கைத்தொழில்களைச் சிறிது சிறிதாக அழித்தனர். நாம் ஏமாந்திருந்த நேரம் பார்த்து, நமது செல்வத்தைக் கொள்ளையடித்து நம் மக்களை விலங்குகளைப் போல வாழச் செய்தனர். எனவே, நம் நாட்டினர் சொந்த நாட்டிலேயே அடிமைகளாகக் கிடைத்த வேலைகளைச் செய்து மனைவி, மக்களுடன் இழிந்த நிலையில் வாழ்ந்தனர்.

கூலித் தொழிலாளர்கள் மீது ஒன்றுக்குப் பத்து, நூறு, ஆயிரமாகக் கணக்கெழுதி கடன்சுமை இருக்குமாறு அவர்களை வாழ்நாள் முழுவதும் கடனாளியாக்கினர். அவர்களை இரக்கம் இல்லாமல் கப்பல்களில் ஏற்றி இலங்கை, அந்தமான் போன்ற இடங்களில் உள்ள தேயிலைத் தோட்டங்களுக்கு வேலை செய்ய அனுப்பினர். தொழிலாளர்கள் உணவுக்கும் பிற செலவுகளுக்கும் கூலி போதாமல் மண்ணுளிப் பாம்பு போல் வாழ்ந்து வருகின்றனர்.

தொழிலாளர்கள் இவ்வாறு துன்புறுவதற்குக் காரணம் கல்வி, ஒழுக்கம், நாகரிகம் ஆகியவை இல்லாமையே ஆகும். எனவே, இனியாவது உங்கள் பிள்ளைகளுக்கெல்லாம் உயர்வான கல்வியைக் கற்பித்து, குறையில்லாமல் வாழ்வதற்கு ஊரில் ஒற்றுமையாக வாழ்வது என உறுதியேற்றுக் கொள்ளுங்கள்.



நூல் வெளி

மக்கள் இயல்பாகத் தங்கள் வாழ்வில் ஏற்படும் தாக்கங்களைப் பாடல்கள், கதைப்பாடல்கள் உள்ளிட்ட இலக்கிய வடிவங்களில் வெளிப்படுத்துகின்றனர். பல்வேறு பொருள்கள் பற்றிய இவ்வெளிப்பாடுகள் 19ஆம் நூற்றாண்டின் இறுதியிலிருந்து 20ஆம் நூற்றாண்டின் முற்பகுதி வரை சிறுசிறு நூல்களாக வெளியிடப்பட்டன. வெகுசன இலக்கியம், முச்சந்தி இலக்கியம், குஜிலி நூல்கள், பெரிய எழுத்துப் புத்தகங்கள் என்று இந்நூல்கள் பலவாறாக அழைக்கப்பட்டன.

'பாரத மக்களின் பரிதாபச் சிந்து' என்ற 'தேயிலைத் தோட்டப் பாட்டு' என்னும் நூலில் இருந்து ஒரு பகுதி நமக்குப் பாடமாகத் தரப்பட்டுள்ளது.

7th Std - Tamil_2025_Term_II_Unit 1.indd 5 6/6/2025 12:28:53 PM

கற்பவை கற்றபின்

உங்கள் பகுதியில் வழங்கும் வாய்மொழி இலக்கியப் பாடல்களைக் கேட்டு எழுதுக.

மதிப்பீடு

சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. மக்களுக்கு வருமானம் கொடுத்து அவர்களைக் காப்பாற்றியது _ _ _ _ _ _ _ _ _ _.

அ) பற்றுவரவு ஆ) சிக்கனம்

இ) கைத்தொழில் ஈ) கப்பல்

2. முற்காலத்தில் இந்தியமக்கள் துன்பப்பட்டதற்குக் காரணம் _ _ _ _ _ _ _ _ _ _ இல்லாமை.

அ) விளையாட்டு ஆ) கல்வி

இ) கலைகள் ஈ) முயற்சி

3. நாடெங்கும் என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது _ _ _ _ _ _ _ _ _ _.

அ) நா + டெங்கும் ஆ) நாடு + டெங்கும்

இ) நா + எங்கும் ஈ) நாடு + எங்கும்

4. குறை + எனவே என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் _ _ _ _ _ _ _ _ _ _.

அ) குறையெனவே ஆ) குறைஎனவே

இ) குறையனவே ஈ) குறைவெனவே

குறுவினா

இந்திய நாடு எவற்றில் சிறந்து விளங்கியது?

சிறுவினா

1. மக்கள் விலங்குகளைப் போல வாழக் காரணம் என்ன?
2. மக்கள் குறையில்லாமல் வாழ, தேயிலைத் தோட்டப் பாட்டு கூறும் வழி யாது?

சிந்தனை வினா

கூலித்தொழிலாளர்களின் வாழ்க்கைத் தரம் உயர நீங்கள் கூறும் வழிமுறைகள் யாவை?

7th Std - Tamil_2025_Term_II_Unit 1.indd 6 6/6/2025 12:28:53 PM

இயல் ஒன்று

வாழ்விக்கும் கல்வி

நுழையும்முன்

உலகில் பலவகையான செல்வங்கள் உள்ளன. அவற்றுள் அழியாத செல்வம் கல்விச் செல்வம் ஆகும். பிற செல்வங்கள் அனைத்தும் அழியும் தன்மையுடையன. கல்வி கற்பதற்குக் கால எல்லை இல்லை. கல்வியின் இன்றியமையாமை, கற்க வேண்டிய நூல்கள், கற்கும் கால அளவு ஆகியவற்றைக் குறித்து அறிந்து கொள்வோம்.



உலகிலுள்ள உயிரினங்களுள் மனிதப்பிறவி தனித்தன்மை உடையது. ஏனென்றால் மனிதப் பிறவிக்குத்தான் எதிர்காலம் சொல்ல முடியாது. ஒரு வாழைக்கன்று வைத்தால் அஃது எதிர்காலத்தில் வாழைமரமாகி வாழையிலை, வாழைப்பூ, வாழைக்காய், வாழைப்பழம், வாழைத்தண்டு ஆகியவற்றைத் தரும் என்று வைக்கும்போதே சொல்லலாம். ஒரு பசுமாடு கன்று ஈன்றால் அஃது எதிர்காலத்தில் பால் தரும் என்று சொல்லிவிடலாம். மனிதன் எதிர்காலத்தில் என்ன ஆவான் என்று சொல்லவே முடியாது. அதனால்தான் இஃது அருமையான பிறவி.

ஒரு வீட்டில் குழந்தை பிறந்து அக்கம்பக்கத்தில் இருப்பவர்கள் என்ன குழந்தை பிறந்திருக்கிறது என்று கேட்டால், ஆண்குழந்தை அல்லது பெண்குழந்தை என்றுதான் பெற்ற தாய் சொல்லுவாள். அப்படி இல்லாமல் ஒரு மாவட்ட ஆட்சியர் பிறந்திருக்கிறார் என்று சொல்ல முடியுமா? மகாத்மா காந்தி பிறந்த உடனே அவரது தாயார் புத்திலிபாயிடம் போய் அக்கம் பக்கத்தில் இருந்தவர்கள் 'என்ன குழந்தை?' என்று கேட்டிருப்பார்கள். ஆண் குழந்தை என்றுதானே அந்த அம்மா சொல்லி இருப்பார். அப்படி இல்லாமல்

7th Std - Tamil_2025_Term_II_Unit 1.indd 7 6/6/2025 12:28:53 PM

"இப்போதுதான் மகாத்மா காந்தியடிகள் பிறந்திருக்கிறார். உங்களுக்கெல்லாம் சுதந்திரம் வாங்கிக் கொடுக்கப் போகிறார்" என்றா சொல்லியிருப்பார்?

காலமறிதல்

உலகில் மிகவும் அருமையானது என்னவென்றால் அது காலம்தான். மற்றவை எல்லாம் போனால் வரும். காலமும் நேரமும் போனால் வராது. மேசை நாற்காலி போனால் வரும். ஆனால் தேர்வு நேரத்தில் ஒரு பையன் நான்கு நாள்களை வீணடித்து விட்டால் போனது போனதுதான். இன்னொரு மாணவனிடத்திலே கடன் கேட்க முடியாது. "ஒரு நாலு நாள் இருந்தால் கொடுடா! படித்து விட்டுத் திரும்பத் தந்து விடுகிறேன்" என்றெல்லாம் கேட்க முடியாது. இதற்காகத்தான் காலமறிதல், கல்வி என்னும் இரண்டு அதிகாரங்களையும் திருவள்ளுவர் எழுதியுள்ளார்.

அழியாச்செல்வம்

இந்த உலகத்தில் எல்லாச் செல்வமும் மறைந்துவிடும்; அழிந்துவிடும். நான் வெளியூர் சென்றபோது நண்பரைக் கேட்டேன், "இருபது இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்னே இங்கே ஒரு பெரிய ஆலமரம் இருந்ததே, அஃது எங்கே?" என்று. "அது புயல் காற்றிலே விழுந்து விட்டது" என்று சொன்னார். அஃது அழிகிற செல்வம். "அங்கே ஒரு பெரிய கட்டடம் இருந்ததே, அஃது எங்கே?" என்று கேட்டேன். "அது மழை பெய்து இடிந்து விட்டது" என்று பதில் வந்தது. இதுவும் அழிகிற செல்வம்.

நாம் பேசும் போது, "அதோ போகிறாரே, அவர் பத்து ஆண்டுகளுக்கு முன்னே இரண்டு இலட்ச ரூபாய் வைத்திருந்தார். இப்போது எல்லாம் செலவாகிப்போய் இரண்டு ரூபாய் கடன் கேட்கிறார்" என்று சொல்வோம். இஃது அழிகிற செல்வம். கல்வி அப்படிப்பட்டதன்று. "அதோ போகிறாரே அவர் பத்து ஆண்டுகளுக்கு முன்னே பட்டம் பெற்றிருந்தார். இப்போது எல்லாம் செலவாகிப்போய் வெறும் பத்தாம் வகுப்பு ஆகி விட்டார்" என்று சொல்ல மாட்டோம். ஏனென்றால் கல்வி அழியாதது. அதனால்தான்,

கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு
மாடல்ல மற்றை யவை *(குறள் 400)*

என்று வள்ளுவர் கூறுகிறார்.

ஒளிவிளக்கு

கல்வி ஓர் ஒளிவிளக்கு. அதாவது இருக்கும் இடத்தை ஒளிமயமாக ஆக்குவது. அதனுடைய குறிப்பு என்னவென்றால் ஒருவன் கற்றுவிட்டால், அப்படிக் கற்ற கல்வியைப் பலருக்கும் அளிக்க வேண்டும். அப்படிப் பலருக்கும் ஒளி தருவதுதான் கல்வி. கல்வி இல்லாத நாடு விளக்கில்லாத வீடு. விளக்கில்லாத வீட்டில் யார் குடியிருப்பார்கள்? வீடு இருட்டாக இருக்கும். அதுபோல் கல்வி இல்லாத குடும்பத்தை யாரும் மதிக்கமாட்டார்கள்.

கற்றவரும் கல்லாதவரும்

கல்வியறிவு இல்லாதவர்களைத் திருவள்ளுவர் போல் குறை கூறியவர் வேறு எவரும் இல்லை.

விலங்கொடு மக்கள் அனையர் இலங்குநூல்
கற்றாரோடு ஏனை யவர் *(குறள் 410)*

7th Std - Tamil_2025_Term_II_Unit 1.indd 8 6/6/2025 12:28:53 PM

என்னும் திருக்குறளில் கல்வியறிவு இல்லாதவனை விலங்கு என்கிறார். ஏன் விலங்கு என்று சொன்னார்? அது சொன்னால் கேட்காது. மாடு ஒன்று தெருவில் வருகிறது என்று வைத்துக்கொள்ளுங்கள். அந்த மாட்டைப் பார்த்து, "நான் வீட்டுக்குப் போகிறேன். என் பின்னாலேயே வா" என்றால் வருமா? நம்கூட அது வருவதற்குக் கையில் பச்சைப்புல் வைத்துக்கொண்டு காட்டவேண்டும். அது மட்டுமில்லாமல் விலங்கு நல்ல செயல்களைத் தானாகச் செய்யாது.

ஒரு பசுமாடு இருக்கிறது. ஒரு பொருளை உருட்ட வேண்டும் என்றால் அது தானாகவே போய் உருட்டிவிடும். ஒருபொருளை உடைக்க வேண்டும் என்றால் தானாகவே போய் உடைத்துவிடும். ஓர் ஆளை முட்ட வேண்டுமென்றால் தானாகவே போய் முட்டிவிடும். இவ்வளவும் கெட்ட செயல்கள். இவ்வளவும் செய்த அந்தப் பசுமாடு பால் கொடுப்பது நல்ல செயல். ஆனால், அதைத் தானாகக் கொடுக்காது. தானாகவே நம் வீட்டிற்குள் வந்து, 'எங்கே சொம்பைக் காணோமே?' என்று அதுவாகவே எடுத்து வந்து பாலைக் கொடுத்து விட்டுப் போகாது. நல்ல செயலை மனிதன் தானாகச் செய்ய வேண்டும் என்கிறார் வள்ளுவர். இன்னொருவர் வந்து சொல்ல வேண்டும் என்று காத்திருக்கக் கூடாது. நன்றின்பால் உய்ப்பது அறிவு என்று வள்ளுவர் இதற்காகத்தான் சொன்னார். அந்த அறிவைப் பெற உதவுவது கல்வி.

கல்வியும் பள்ளியும்

கல்வி கற்பதற்காகவே குழந்தைகளைப் பள்ளிக்கு அனுப்புகிறோம். பள்ளிக்கூடத்தில் ஆசிரியர்கள் இருக்கிறார்கள். அவர்களால்தான் இளம்பிள்ளைகளை நல்ல குடிமக்களாக உருவாக்க முடியும். மாணவர்களில் எத்தனையோ மருத்துவர்கள் இருப்பார்கள். எத்தனையோ பொறியியலாளர்கள் இருப்பார்கள். எத்தனையோ அறிவியல் அறிஞர்கள் இருப்பார்கள். அதைக் கண்டுபிடித்துச் சொல்பவர்கள் ஆசிரியர்கள். அதை நோக்கிச் செலுத்துவதற்காகத்தான் ஆசிரியர்கள் இருக்கிறார்கள்.

நமது எதிர்காலத்தை உருவாக்கும் பள்ளிக்குக் கோயில் என்று பெயர் வைத்தார் பாரதியார். "பள்ளித் தலமனைத்தும் கோயில் செய்குவோம்; எங்கள் பாரத தேசமென்று தோள்கொட்டுவோம்" என்றார். ஏன் அப்படிச் சொன்னார் பாரதி? ஏனெனில் கல்விக் கூடங்களில்தான் குழந்தைகளின் எதிர்காலம் நிர்ணயிக்கப்படுகிறது. மாணவர்கள் எல்லோரும் எதிர்காலத்திலே மேதைகளாக ஆகவேண்டும். இந்த உலகமே போற்றக்கூடிய அறிஞர்களாக ஆகவேண்டும். அதற்காகத்தான் கோயில்களாகிய பள்ளிக்கூடங்களில் குழந்தைகளைக் கொண்டு வந்து விடுகிறோம்.

ஓர் ஆசிரியர் எல்லா மாணவர்களுக்கும் பாடம் சொல்லிக் கொடுத்தார். அவர்களெல்லாம் பத்தாம் வகுப்பு, பன்னிரண்டாம் வகுப்பு என்று படித்து வெற்றி பெற்றார்கள். அதற்குப் பிறகு இந்த ஆசிரியர் என்ன செய்வார்? அவர்களுக்கெல்லாம் வாழ்த்துக் கூறி, 'நீங்கள் எல்லாம் மேலே நன்றாகப் படித்துக் கல்லூரியில் கெட்டிக்காரன் என்று பெயர் வாங்குங்கள்' என்று சொல்லித்தான் அனுப்புவார். அப்படியில்லாமல் அவர்களுக்குச் சொல்லிக் கொடுத்ததை எல்லாம் திருப்பியா கேட்பார்? 'என்னிடம் இருந்த கல்வியை எல்லாம் உங்களுக்குச் சொல்லிக் கொடுத்து விட்டேன். எல்லாக் கல்வியையும்

7th Std - Tamil_2025_Term_II_Unit 1.indd 9 6/6/2025 12:28:54 PM

நீங்களே எடுத்துக்கொண்டு போய்விட்டால் அடுத்து வருபவர்களுக்கு நான் எப்படிச் சொல்லிக் கொடுப்பேன்? நான் சொல்லிக்கொடுத்த கல்வியை எல்லாம் திருப்பிக் கொடுங்க' என்றா கேட்பார்? கேட்கமாட்டார். ஏனென்றால் கல்வியானது கொடுக்கக் கொடுக்க வளரும். பணம் கொடுக்கக் கொடுக்கக் குறையும்.

கற்க கசடற

படிக்க வேண்டிய நூல்களை நன்கு ஆராய்ந்து தேர்ந்தெடுத்துப் படிக்க வேண்டும். சிலர் பத்துப் புத்தகங்கள் எழுதுகிறார்கள். சிலர் ஐம்பது புத்தகங்கள் எழுதுகிறார்கள். ஆனால், திருவள்ளுவர் வாழ்நாள் முழுக்க ஒரே ஒரு நூல்தான் எழுதி இருக்கிறார். அப்படி என்றால் எவ்வளவு சிந்தித்துச் சிந்தித்து எழுதி இருக்க வேண்டும்!

சில நூல்களைப் பற்றிச் சிந்தனை செய்யவே வேண்டாம். சில நூல்கள் படித்தவுடனேயே விளங்கும். சில நூல்களைப் படித்துவிட்டு ஆழமாகச் சிந்திக்க வேண்டும்.


பூமியிலே விளைகின்ற பொருள்களில் சில பூமிக்கு மேலேயே விளையும். கத்தரிக்காய், வாழைக்காய், கீரை இவையெல்லாம் பூமிக்கு மேலே விளையும். சில மண்ணுக்குள்ளேயே உண்டாகி இருக்கும். அவற்றை நாம்தான் தோண்டி எடுக்க வேண்டும். அதுபோல நாம் படிக்கும் நூல்களில் சிலவற்றை ஒரு முறை படித்தால் போதாது. மீண்டும் மீண்டும் ஆழ்ந்து படித்தால்தான் அதன் பொருள் விளங்கும். அப்படிப்பட்ட நூல்களை ஆழ்ந்து ஆராய்ந்து படிக்க வேண்டும். அதனால்தான் திருவள்ளுவர் 'கற்க – கசடற – கற்பவை' என்று சொன்னார்.

எதைப் படிக்க வேண்டுமோ அதைத்தான் படிக்க வேண்டும். எனவே, நாம் வாழ்நாள் முழுவதும் கற்போம்; கற்க வேண்டியவற்றைக் கற்போம்; நூலின் உட்பொருளை உணர்ந்து கற்போம்; அதன்படி நடந்து வாழ்வில் உயர்வடைவோம்.

நூல் வெளி



திருக்குறள் வகுப்புகள் நடத்தியும் தொடர் சொற்பொழிவுகள் நிகழ்த்தியும் திருக்குறளைப் பரப்பும் பணி செய்தவர் திருக்குறளார் வீ. முனிசாமி. நகைச்சுவை ததும்பும் தமது பேச்சால் மக்களைக் கவர்ந்தவர் இவர். வள்ளுவர் உள்ளம், வள்ளுவர் காட்டிய வழி, திருக்குறளில் நகைச்சுவை உள்ளிட்ட பல நூல்களை எழுதியுள்ளார். உலகப்பொதுமறை திருக்குறள் உரை விளக்கம் என்னும் இவரது நூல் பெரும்புகழ் பெற்றது. இக்கட்டுரை சிந்தனைக் களஞ்சியம் என்னும் இவரது நூலிலிருந்து தொகுத்துத் தரப்பட்டுள்ளது.





கற்பவை கற்றபின்

கல்வி தொடர்பான பாடல் அடிகளைத் தொகுத்து எழுதுக.

(எ.கா.) கல்வி கரையில; கற்பவர் நாள் சில.

7th Std - Tamil_2025_Term_II_Unit 1.indd 10 6/6/2025 12:28:54 PM



மதிப்பீடு

சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. காலத்தின் அருமையைக் கூறும் திருக்குறள் அதிகாரம் _ _ _ _ _ _.

   அ) கல்வி ஆ) காலமறிதல் இ) வினையறிதல் ஈ) மடியின்மை

2. கல்வியில்லாத நாடு _ _ _ _ _ _ _ _ வீடு.

   அ) விளக்கில்லாத ஆ) பொருளில்லாத

   இ) கதவில்லாத ஈ) வாசலில்லாத

3. 'பள்ளித் தலமனைத்தும் கோயில் செய்குவோம்' என்று பாடியவர் _ _ _ _ _ _ _ _.

   அ) திருக்குறளார் ஆ) திருவள்ளுவர்

   இ) பாரதியார் ஈ) பாரதிதாசன்

4. 'உயர்வடைவோம்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது _ _ _ _ _ _ _ _.

   அ) உயர் + வடைவோம் ஆ) உயர் + அடைவோம்

   இ) உயர்வு + வடைவோம் ஈ) உயர்வு + அடைவோம்

5. இவை + எல்லாம் என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் _ _ _ _ _ _ _.

   அ) இவைஎல்லாம் ஆ) இவையெல்லாம்

   இ) இதுயெல்லாம் ஈ) இவயெல்லாம்

சொற்றொடரில் அமைத்து எழுதுக.

1. செல்வம் 2. இளமைப்பருவம் 3. தேர்ந்தெடுத்து

குறுவினா

1. மனிதப் பிறவிக்கும் பிற உயிரினங்களுக்கும் இடையே உள்ள வேறுபாடு யாது?
2. கல்வி அறிவு இல்லாதவர்கள் பற்றி வள்ளுவர் கூறுவது யாது?
3. நூல்களை எவ்வாறு படிக்க வேண்டும்?

சிறுவினா

1. கல்வியே அழியாத செல்வம் என்பதை விளக்குக.
2. கல்வியையும் விளக்கையும் திருக்குறளார் எவ்வாறு ஒப்பிடுகிறார்?

சிந்தனை வினா

நல்ல நூலின் இயல்புகளாக நீங்கள் கருதுவன யாவை?

7th Std - Tamil_2025_Term_II_Unit 1.indd 11 6/6/2025 12:28:54 PM

இயல் ஒன்று

பள்ளி மறுதிறப்பு



ஒவ்வொரு மனிதனுக்கும் சில கடமைகள் உண்டு. அவை மனிதனின் ஒவ்வொரு பருவத்திற்கும் ஏற்ப மாறுபடும். இளமைப்பருவம் கல்விக்கு உரியது. எனவேதான் "இளமையில் கல்" என்று ஔவையார் கூறினார். இளமையில் கற்கும் கல்வி ஒருவனைச் சான்றோனாக உருவாக்கும். எந்தக் காரணத்திற்காகவும் கல்வி கற்பதைத் தவிர்க்கக் கூடாது என்பதை உணர்த்தும் கதை ஒன்றைப் படிப்போம்.



பள்ளி மறுதிறப்புக்கு இரண்டு நாள்கள் இருந்தன. மதிவாணனுக்குக் கோடை விடுமுறை ஒன்றரை மாதமும் ஓடிவிட்டது.

பேருந்து நிறுத்தம் கூட்டத்தால் நிரம்பி வழிந்தது. "என்ன சிந்தனையடா, மதி?" மதிவாணனின் தோளைத் தொட்டபடி கேட்டான் கவின். "ரெண்டு நாள்லே பள்ளி திறக்கப் போகுது" என்றான் மதிவாணன்.

"பள்ளிக்குப் போகணும்ங்கற கவலையா?"

"கவலையில்லடா, முடிவு பண்ணனும்"

"என்ன முடிவு?"

"பள்ளிக்குப் போறதா, இல்லே பின்னலாடை நிறுவனத்துக்குப் போறதான்னு.."

"நாங்கெளெல்லாம் பின்னலாடை நிறுவனத்துக்குத்தான். நான் முடிவு பண்ணிட்டேன். வாராவாரம் சம்பளம். திரைப்படம் பாக்கக் காசு கிடைக்குது. சாயங்காலமானா பரோட்டா.. இடையில போண்டா... வீட்ல யாரும் திட்டறதும் இல்லே. மகிழ்ச்சியாத்தானே இருக்கோம். இந்த மகிழ்ச்சி போதும்" என்றான் கவின்.

கோடை விடுமுறை தொடங்கியபோதும் இந்தக் குழப்பம் மதிவாணனுக்கு இருந்தது. நாலைந்து நாள்கள் அக்காவீடு, அத்தை வீடு போய் வந்தான். தொலைக்காட்சி பார்த்துப் பொழுது போக்கினான்.

நண்பன் கவின் ஒரு நாள் அழைத்தான். "சும்மாதானே இருக்கே. வாடா பின்னலாடை நிறுவனத்துக்குப் போகலாம். புதிய உடைகள், எழுதுகோல்கள், குறிப்பேடுகள், வாங்கப் பணம் சம்பாதிச்சுருவே" என்றான்.

7th Std - Tamil_2025_Term_II_Unit 1.indd 12 6/6/2025 12:28:54 PM

சரி என்று சேர்ந்துவிட்டான். ஒன்றரை மாதங்கள் ஓடிவிட்டன. பின்னலாடை நிறுவன வேலை புதுசாக இருந்தது. ஆடைகளை அடுக்கிக் கட்டும் வேலைதான்.

சனிக்கிழமை வாரச் சம்பளம். பத்து மணிக்கும் பிற்பகலிலும் வடை, தேநீர். இரவில் பரோட்டா, தோசை என்று சுவையாகச் சாப்பிட முடிந்தது. அம்மா அவனது சம்பளப் பணத்தைப் பத்திரமாக வைத்திருப்பதாய்ச் சொன்னார். செலவழிந்து போயிருந்தாலும் கொடுத்துவிடுவார். பள்ளி திறக்கும்போது நல்லா செலவு செய்யலாம்.

அதிகாரிகள் ஆய்வுக்கு வரும்போது வெளியில் அனுப்பி விடுகிறார்கள். ஒரு வேளை கண்டுபிடித்துவிட்டால், வயது பதினைந்து என்று சொல்லச் சொன்னார்கள். பின்னலாடை நிறுவனத்துக்குப் போய்க்கொண்டே இருந்தால் அவனும் குழந்தைத் தொழிலாளிதான். வாழ்க்கை முழுவதும் தொழிலாளிதான் என்பது நினைவுக்கு வந்தது.

தொழிலாளியாக இருப்பது கேவலம் இல்லை. ஆனால், படிக்கிற வயதில் வேலை தேவையா? மருத்துவர், பொறியாளர், வெளிநாட்டு வேலை என்று அவனுக்குள்ளும் கனவுகள் இருந்தன.

படித்தால் வேறு வேலை பார்க்கலாம். அதிகமான சம்பளம் கிடைக்கும். படித்துவிட்டுச் சொந்தமாகத் தொழிலும் செய்யலாம். அப்படி இல்லாமல் இந்த வயதிலிருந்து தொழிலாளியாகவே வாழ்க்கையைக் கடத்துவதா? சிந்தித்தான்.

கல்வியறிவு முதன்மையானது. ஒரு பட்டமாவது வாங்க வேண்டும். எதிரில் இருந்த விளம்பரப்பலகை கண்ணில் பட்டது. அதில் அம்பேத்கரும் அப்துல் கலாமும் தென்பட்டனர். இவர்களைப் போல் உயரவேண்டுமானால் படிப்பு வேண்டும். படிப்பில்லாமல் உயரமுடியுமா? படிப்பு அடிப்படைத் தேவை.

பள்ளிக்குப் போகவில்லை என்று சொன்னாலும் அப்பா "சரி" என்பார். 'சம்பளம் வருதே' என்பார். இந்தக் குறைந்த சம்பளத்திற்காகப் படிப்பைத் தொலைப்பதா? போண்டாவும் வடையும் பரோட்டாவும் வீட்டில் கிடைக்காது. அவற்றுக்கு அடிமையாவதா? தலையை உலுக்கிக் கொண்டான் மதிவாணன்.

மதிவாணன் தன் அருகில் வந்து நின்ற முதியவரைப் பார்த்தான். முகம் இடுங்கி இருந்தது. மழிக்கப்படாத முகம். சோர்வாக இருந்தார். "இது நல்லூர் போகுமா?" என்று கேட்டார்.

மதிவாணன் வந்து நின்ற பேருந்தைப் பார்த்தான். முதியவரின் பார்வை அக்கம் பக்கமிருந்த சிறுவர்களின்மீது இருந்தது. "என்னப்பா, இது நல்லூர் போகுமா?"

அவர்களுள் ஒரு சிறுவன் பேருந்தின் முகப்பைக் கூர்ந்து கவனித்தான். எதுவும் பேசாமல் புன்முறுவல் வந்தது.

"என்னப்பா போகுமா?" என்று மீண்டும் கேட்டார் அவர்.

"யாருக்குத் தெரியும்? எங்களுக்குப் படிக்கத் தெரியாதே" என்று கூறியபடி ஒரு சிறுவன் முகத்தைத் திருப்பிக் கொண்டான்.



7th Std - Tamil_2025_Term_II_Unit 1.indd 13 6/6/2025 12:28:54 PM

"சின்னப் பசங்களா இருக்கீங்க. இதுகூட படிச்சுச் சொல்லத் தெரியாதா?"

ஒருவன் வெறுப்புடன் இடைமறித்தான். "பெரியவரே... இதப் படிக்கக்கூட உங்களுக்குத் தெரியாதா...?" 'ஓ...'வென்று கேலியான ஓசை வந்தது. சிரித்தார்கள்.

இதைக் கவனித்துக் கொண்டிருந்தான் மதிவாணன். அவர் அருகே சென்றான். "இந்தப் பேருந்து நல்லூர் போகாதுங்க. நல்லூர் பேருந்து வந்தா சொல்றேன்" என்றான்.

"சரி தம்பி".

முதியவருக்குப் படிப்பு இல்லை. பேருந்தில் எழுதி இருப்பதைப் படிக்க முடியவில்லை. இந்த வயதிலும் அவமானப்படுகிறார். கல்வியறிவு இல்லாமல் போய்விட்டால் நானும் இப்படித்தான் வாழ்க்கை முழுவதும் அவமானப்படவேண்டும். நல்ல கல்வியறிவு தலைநிமிர்ந்து நிற்க வைக்கும். நல்ல படிப்புதான் சிறந்த மனிதனாக்கும் என்ற எண்ணம் வந்தது. விறுவிறுவென்று நடக்கத் தொடங்கினான்.

"டேய்! எங்கடா போறே?" குரல் கவினிடமிருந்து வந்தது.

"பள்ளிக்கு"

"பள்ளி திறக்கறதுக்கு இன்னும் ரெண்டு நாள் இருக்கே"

"பள்ளிக்குப் போறேண்டா"

சாலையைக் கடந்தபோது மதிவாணனுக்குப் பெருமூச்சு வந்தது. இறக்கைகளைக் கட்டிக்கொண்டு பறப்பது போல் இருந்தது. இப்படியே பறந்துபோய் யாருமில்லாத பள்ளியை வேடிக்கை பார்க்க வேண்டும் போலிருந்தது அவனுக்கு.



நூல் வெளி

இக்கதையை எழுதியவர் சுப்ரபாரதிமணியன். இவர் குழந்தைத் தொழிலாளர் முறை ஒழிப்பு, இயற்கை வளங்களைப் பாதுகாத்தல் போன்ற கருத்துகளை வலியுறுத்திச் சிறுகதை, புதினம், கட்டுரை முதலியவற்றை எழுதியுள்ளார்; கனவு என்னும் இலக்கிய இதழை நடத்தி வருகிறார். பின்னல், வேட்டை, தண்ணீர் யுத்தம், புத்துமண், கதை சொல்லும் கலை உள்ளிட்ட பல நூல்களை எழுதியுள்ளார்.



கற்பவை கற்றபின்

1. 'பள்ளி மறுதிறப்பு' என்னும் கதையை வகுப்பில் நாடகமாக நடித்துக் காட்டுக.
2. எழுதப்படிக்கத் தெரியாதவர்களுக்கு எவ்வாறு உதவுவீர்கள்? வகுப்பில் கலந்துரையாடுக.



மதிப்பீடு

மதிவாணன் பள்ளிக்குச் செல்ல முடிவெடுத்த நிகழ்வைச் சுருக்கி எழுதுக.

7th Std - Tamil_2025_Term_II_Unit 1.indd 14 6/6/2025 12:28:54 PM

கற்கண்டு

இயல் ஒன்று

இலக்கியவகைச் சொற்கள்

பூ, வா, அறம், கடிதம், புத்தகம் இச்சொற்களை நோக்குங்கள்.

இவற்றில் முதல் இரு சொற்கள் ஒரெழுத்தைக் கொண்டவை. அடுத்த சொற்கள் மூன்று, நான்கு, ஐந்து எழுத்துகளைக் கொண்டவை. இவை அனைத்தும் பொருள் தருகின்றன.

இவ்வாறு ஓர் எழுத்து தனித்தும் ஒன்றிற்கும் மேற்பட்ட எழுத்துகள் தொடர்ந்தும் வந்து பொருள் தருவது சொல் எனப்படும். மொழி, பதம், கிளவி என்பன சொல் என்னும் பொருள் தரும் வேறு சொற்களாகும்.

இலக்கண முறைப்படி பெயர்ச்சொல், வினைச்சொல், இடைச்சொல், உரிச்சொல் எனச் சொற்கள் நான்கு வகைப்படும் என்பதை முன் வகுப்பில் கற்றீர்கள். அதேபோல் இலக்கிய வகையில் சொற்களை இயற்சொல், திரிசொல், திசைச்சொல், வடசொல் என நான்கு வகையாகப் பிரிக்கலாம்.

இயற்சொல்

கடல், கப்பல், எழுதினான், படித்தான் ஆகிய சொற்களைக் கவனியுங்கள். இவற்றின் பொருள் இயல்பாகவே எளிதில் விளங்குகிறது. இவ்வாறு எளிதில் பொருள் விளங்கும் வகையில் அமைந்த சொற்கள் இயற்சொற்கள் எனப்படும். இயற்சொல்லைப் பெயர், வினை, இடை, உரி என நான்கு வகையாகப் பிரிக்கலாம்.

(எ.கா.)

மண், பொன்	பெயர் இயற்சொல்
நடந்தான், வந்தான்	வினை இயற்சொல்
அவனை, அவனால்	இடை இயற்சொல்
மாநகர்	உரி இயற்சொல்

திரிசொல்

வங்கூழ், அழுவம், சாற்றினான், உறுபயன் ஆகிய சொற்களைக் கவனியுங்கள். இச்சொற்கள் இலக்கியங்களில் பயின்று வரும் சொற்களாகும். இவை முறையே காற்று, கடல், சொன்னான், மிகுந்த பயன் எனப் பொருள் தரும். இவ்வாறு கற்றோர்க்கு மட்டுமே விளங்குபவையாகவும் இலக்கியங்களில் மட்டுமே பயின்று வருபவையாகவும் அமையும் சொற்கள் திரிசொற்கள் எனப்படும்.

7th Std - Tamil_2025_Term_II_Unit 1.indd 15 6/6/2025 12:28:54 PM

திரிசொலைப் பெயர், வினை, இடை, உரி என நான்கு வகையாகப் பிரிக்கலாம்.

(எ.கா.)

அழுவம், வங்கம்	பெயர்த் திரிசொல்
இயம்பினான், பயின்றாள்	வினைத் திரிசொல்
அன்ன, மான	இடைத் திரிசொல்
கூர், கழி	உரித் திரிசொல்

திரிசொற்களை ஒரு பொருள் குறித்த பல திரிசொற்கள் எனவும், பல பொருள் குறித்த ஒரு திரிசொல் எனவும் இருவகைப்படுத்தலாம்.

வங்கம், அம்பி, நாவாய் – என்பன கப்பல் என்னும் ஒரே பொருளைத் தருவதால் ஒரு பொருள் குறித்த பல திரிசொற்கள் என்பர்.

இதழ் என்னும் சொல் பூவின் இதழ், உதடு, கண் இமை, பனையேடு, நாளிதழ் ஆகிய பல பொருள்களைத் தருவதால் பல பொருள் குறித்த ஒரு திரிசொல் என்பர்.

திசைச்சொல்

சாவி, சன்னல், பண்டிகை, இரயில் முதலிய சொற்கள் தமிழில் வழக்கில் இருந்தாலும் இவை தமிழ்ச்சொற்கள் அல்ல. இவை பிறமொழிகளில் இருந்து வந்து தமிழில் வழங்கி வருபவை. இவ்வாறு வடமொழி தவிர, பிற மொழிகளில் இருந்து வந்து தமிழில் இடம்பெறும் சொற்கள் திசைச்சொற்கள் எனப்படும்.

முற்காலத்தில் பாண்டிநாட்டைத் தவிர, தமிழ்நாட்டின் பிற பகுதிகளில் வழங்கிய சொற்களையும் திசைச்சொற்கள் என்றே வழங்கினர்.

(எ.கா.) கேணி (கிணறு), பெற்றம் (பசு)

வடசொல்

வருடம், மாதம், கமலம், விடம், சக்கரம் முதலிய சொற்கள் தமிழில் வழக்கில் இருந்தாலும் இவை தமிழ்ச்சொற்கள் அல்ல. இவை வடமொழி எனப்படும் சமஸ்கிருத மொழிச்சொற்கள் ஆகும். இவ்வாறு வடமொழியிலிருந்து வந்து தமிழில் இடம்பெறும் சொற்கள் வடசொற்கள் எனப்படும்.

வடசொற்களைத் தற்சமம், தற்பவம் என இருவகையாகப் பிரிப்பர்.

கமலம், அலங்காரம் என வடமொழியில் இருப்பது போன்றே தமிழில் எழுதுவதைத் தற்சமம் என்பர். லக்ஷ்மி என்பதை இலக்குமி என்றும், விஷம் என்பதை விடம் என்றும் தமிழ் எழுத்துகளால் மாற்றி எழுதுவதைத் தற்பவம் என்பர்.

தற்காலத்தில் திசைச்சொற்களும் வடசொற்களும் அடையாளம் காண முடியாதபடி மக்கள் வழக்கில் கலந்துள்ளன.

7th Std - Tamil_2025_Term_II_Unit 1.indd 16 6/6/2025 12:28:54 PM

கற்பவை கற்றபின்

நாளிதழ் செய்தியொன்றை எடுத்துக்கொண்டு அதிலுள்ள நால்வகைச் சொற்களையும் வகைப்படுத்திப் பட்டியல் உருவாக்குக.

மதிப்பீடு

சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. எல்லார்க்கும் எளிதில் பொருள் விளங்கும் சொல் _ _ _ _ _ _ _ _.

   அ) இயற்சொல் ஆ) திரிசொல் இ) திசைச்சொல் ஈ) வடசொல்

2. பலபொருள் தரும் ஒருசொல் என்பது _ _ _ _ _ _ _ _ _ _ _.

   அ) இயற்சொல் ஆ) திரிசொல் இ) திசைச்சொல் ஈ) வடசொல்

3. வடமொழி என்று அழைக்கப்படும் மொழி _ _ _ _ _ _ _ _ _ _ _.

   அ) மலையாளம் ஆ) கன்னடம் இ) சமஸ்கிருதம் ஈ) தெலுங்கு

பொருத்துக.

1. இயற்சொல் – பெற்றம்
2. திரிசொல் – இரத்தம்
3. திசைச்சொல் – அழுவம்
4. வடசொல் – சோறு

குறுவினா

1. இயற்சொல்லின் நான்கு வகைகள் யாவை?
2. குங்குமம், கமலம் என்பன எவ்வகை வடசொற்கள்?
3. இலக்கிய வகைச் சொற்கள் எத்தனை வகைப்படும்? அவை யாவை?
4. திரிசொல்லின் வகைகள் குறித்து விளக்குக.
5. பண்டிகை, கேணி என்பன எவ்வகைச் சொற்கள்? விளக்குக.

7th Std - Tamil_2025_Term_II_Unit 1.indd 17 6/6/2025 12:28:54 PM

மொழியை ஆள்வோம்!

கேட்க.

சிறந்த கல்வியாளர்களின் சொற்பொழிவுகளை இணையத்தில் கேட்டு மகிழ்க.

கீழ்க்காணும் தலைப்பில் இரண்டு நிமிடம் பேசுக.

1. கல்வியின் சிறப்பு.
2. குழந்தைத் தொழிலாளர் முறை ஒழிப்பு.

கீழ்க்காணும் சொற்களை அறுவகைப் பெயர்களாக வகைப்படுத்துக.

நல்லூர், வடை, கேட்டல், முகம், அன்னம், செம்மை, காலை, வருதல், தோகை, பாரதிதாசன், பள்ளி, இறக்கை, பெரியது, சோலை, ஐந்து மணி, விளையாட்டு, புதன்

பொருள்	இடம்	காலம்	சினை	குணம்	தொழில்

பின்வரும் தொடர்களில் பொருத்தமான இடங்களில் 'ஆல்' என்னும் உருபைச் சேர்த்து எழுதுக.

1. கல்லணை கரிகாலன் கட்டப்பட்டது.
2. அறிஞர் அண்ணா தமது பேச்சுவன்மை மக்களைக் கவர்ந்தார்.
3. திருக்குறள் குறள் வெண்பா என்னும் பாவகை ஆன நூல்.
4. மற்றவர்களுக்கு என் முடிந்த உதவிகளைச் செய்வேன்.
5. அவர் களிமண் பானை வனைந்தார்.

அறிந்து பயன்படுத்துவோம்.

அலுவலகக் கடிதம்

ஒரு குறிப்பிட்ட நோக்கத்திற்காக ஓர் அலுவலகம் அல்லது நிறுவனத்திற்கு எழுதப்படும் கடிதம் அலுவலகக் கடிதம் ஆகும். இதனை விண்ணப்பக் கடிதம் அல்லது விண்ணப்பம் எனவும் கூறுவர். இவ்வகைக் கடிதம், உறவினருக்கு எழுதப்படும் கடிதத்திலிருந்து வேறுபட்ட வடிவத்தைக் கொண்டிருக்கும்.

- முதலில் அனுப்புநரின் பெயரும் முகவரியும் இடம்பெறும்.
- அடுத்து, பெறுநரின் அலுவலகப் பதவிப்பெயரும் முகவரியும் இடம்பெறும்.
- அதனை அடுத்து மதிப்பிற்குரிய ஐயா/ அம்மா என்னும் விளி இடம்பெறும்.

7th Std - Tamil_2025_Term_II_Unit 1.indd 18 6/6/2025 12:28:55 PM

- அதற்குக் கீழே பொருள் என்னும் தலைப்பில் கடிதத்தின் நோக்கத்தைச் சுருக்கமாகக் குறிப்பிட வேண்டும்.
- அதன்பின் இடம்பெறுவது கடிதத்தின் உடல் பகுதியாகும். இப்பகுதியில் கடிதம் எழுதுபவரின் கோரிக்கைக்கான காரணமும் வேண்டுகோளும் தெளிவாக எழுதப்பட வேண்டும்.
- அதன்கீழ் இடப்பக்கம் இடமும் தேதியும் குறிப்பிடப்பட வேண்டும்.
- வலப்பக்கம் கையொப்பம் இடம்பெற வேண்டும். கடிதத்தின் இறுதிப் பகுதியில் உறைமேல் முகவரி இடம்பெறுவது மரபு.

கடிதம் எழுதுக.


உங்கள் பகுதியில் நூலகம் ஒன்று அமைத்துத்தர வேண்டி பொது நூலக இயக்குநருக்குக் கடிதம் எழுதுக.



மொழியோடு விளையாடு

கீழே உள்ள குறிப்புகளைப் பயன்படுத்திக் கட்டத்தில் எழுத்துகளை நிரப்புக.

1. காலையில் பள்ளி மணி _ _ _ _ _ _ _ _.
2. திரைப்படங்களில் விலங்குகள் _ _ _ _ _ _ காட்சி குழந்தைகளுக்குப் பிடிக்கும்.
3. கதிரவன் காலையில் கிழக்கே _ _ _ _ _ _ _ _.
4. நாள்தோறும் செய்தித்தாள் _ _ _ _ _ _ _ வழக்கம் இருக்க வேண்டும்.



7th Std - Tamil_2025_Term_II_Unit 1.indd 19 6/6/2025 12:28:55 PM

ஓர் எழுத்துச் சொற்களால் நிரப்புக.

1. _ _ _ _ _ _ _ _ புல்லை மேயும்.
2. _ _ _ _ _ _ _ _ சுடும்.
3. _ _ _ _ _ _ _ _ பேசும்.
4. _ _ _ _ _ _ _ _ பறக்கும்.
5. _ _ _ _ _ _ _ _ மணம் வீசும்.

பின்வரும் எழுத்துகளுக்குப் பொருள் எழுதுக.

(எ.கா.) தா – கொடு

1. தீ _
2. பா _
3. தை _
4. வை _
5. மை _

பின்வரும் சொற்களை இருபொருள் தருமாறு தொடரில் அமைத்து எழுதுக.

ஆறு, விளக்கு, படி, சொல், கல், மாலை, இடி

(எ.கா.) ஆறு – ஈ ஆறு கால்களை உடையது.

தஞ்சாவூரில் காவிரி ஆறு பாய்கிறது.



நிற்க அதற்குத் தக...

என் பொறுப்புகள்...

1. பாடப்புத்தகங்கள் மட்டுமன்றிப் பிற புத்தகங்களையும் படிப்பேன்.
2. பெற்றோர், ஆசிரியர், மூத்தோர் இவர்களை எப்போதும் மதித்து நடப்பேன்.

படிப்போம்; பயன்படுத்துவோம்!

கோடை விடுமுறை	–	*Summer Vacation*	நீதி	–	*Moral*
குழந்தைத் தொழிலாளர்	–	*Child Labour*	சீருடை	–	*Uniform*
பட்டம்	–	*Degree*	வழிகாட்டுதல்	–	*Guidance*
எழுத்தறிவு	–	*Literacy*	ஒழுக்கம்	–	*Discipline*

7th Std - Tamil_2025_Term_II_Unit 1.indd 20 6/6/2025 12:28:55 PM

இயல் இரண்டு

கலை வண்ணம்



கற்றல் நோக்கங்கள்

- எளிய சொற்களும் கருத்துகளும் கவிதைப்பொருளாகும் திறமறிந்து தானே கற்றல்
- ஓவியக்கலையின் மேன்மையையும் அது மனித வாழ்வோடு இணைந்துள்ள நுட்பத்தையும் உணர்ந்து போற்றுதல்
- தமிழகச் சுற்றுலா இடங்களையும் அவை வெளிப்படுத்தும் கலை, பண்பாட்டுக் கூறுகளையும் படித்தறிதல்
- தொழிற்பெயரின் வகைகளை அறிந்து பயன்படுத்துதல்


7th Std - Tamil_2025_Term_II_Unit 2.indd 21 6/6/2025 12:29:52 PM

இயல் இரண்டு

பூத்தொடுத்தல்

நுழையும்முன்

கலைகள் மனித வாழ்விற்கு அழகூட்டுபவை. தத்தித் தாவும் குழந்தை முதல் தள்ளாடும் முதியவர் வரை யாவரும் அழகுணர்ச்சி மிக்கவர்களே! நார் எடுத்து நறுமலரைத் தொடுப்பவளின் விரல்வளைவிலும் அழகு சிரிப்பதைக் கூறும் கவிதை ஒன்றை அறிவோம் வாருங்கள்!



இந்தப் பூவைத் தொடுப்பது எப்படி?

சாந்தமானதொரு பிரபஞ்சத்தைச்
சுமக்கின்றன ஒல்லித் தண்டுகள்.

இறுக்கி முடிச்சிட்டால்
காம்புகளின் கழுத்து முறியும்.

தளரப் பிணைத்தால்
மலர்கள் தரையில் நழுவும்.

வாசலில் மரணம் நிற்பதறிந்தும்
வருந்தாமல் சிரிக்கும்
இந்தப் பூவை
எப்படித் தொடுக்க நான்–

ஒருவேளை,
என் மனமே நூலாகும்
நுண்மை உற்றாலொழிய.

– உமா மகேஸ்வரி

7th Std - Tamil_2025_Term_II_Unit 2.indd 22 6/6/2025 12:29:52 PM

சொல்லும் பொருளும்

சாந்தம் – அமைதி

நுண்மை – நுட்பம்

பிரபஞ்சம் – அண்டம் (பெருவெளி)

உற்றால் – அடைந்தால்



நூல் வெளி

கவிஞர் உமா மகேஸ்வரி மதுரை மாவட்டத்தில் பிறந்தவர். இவர், நட்சத்திரங்களின் நடுவே, வெறும் பொழுது, கற்பாவை உள்ளிட்ட கவிதைத் தொகுதிகளைப் படைத்துள்ளார்; கவிதை, சிறுகதை, புதினம் என்று பலவகை இலக்கியங்களைப் படைத்து வருகிறார்.



கற்பவை கற்றபின்

மாலை தொடுக்க உதவும் பூக்களின் பெயர்களைத் திரட்டி வருக.



மதிப்பீடு

சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. போர் இல்லாத உலகில் _ _ _ _ _ _ _ _ _ _ நிலவும்.

   அ) பதற்றம் ஆ) சாந்தம் இ) சோர்வு ஈ) வெறுப்பு

2. முடிச்சிட்டால் என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது _ _ _ _ _ _ _ _ _ _.

   அ) முடிச்சி + இடல் ஆ) முடிச்சி + சிட்டால்

   இ) முடிச்சு + இட்டால் ஈ) முடிச்சு + இடல்

3. நிற்பது + அறிந்தும் என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் _ _ _ _ _ _ _ _ _ _.

   அ) நிற்பதறிந்தும் ஆ) நிற்பதுஅறிந்தும் இ) நிற்பறிந்தும் ஈ) நிற்பதறிந்தோம்

குறுவினா

1. மலர்கள் எப்போது தரையில் நழுவும்?
2. பூவின் சிரிப்பைப் பற்றிக் கவிஞர் உமா மகேஸ்வரி கூறுவது யாது?


சிந்தனை வினா

பூக்களைக் கொய்யும்போது உங்கள் உள்ளத்தில் தோன்றும் எண்ணங்களை எழுதுக.

7th Std - Tamil_2025_Term_II_Unit 2.indd 23 6/6/2025 12:29:52 PM

இயல் இரண்டு

பேசும் ஓவியங்கள்



ஆயகலைகள் அறுபத்து நான்கனுள் ஒன்று ஓவியக்கலை. காண்போரின் கண்ணையும் கருத்தையும் கவர்ந்திழுக்கும் ஆற்றல் ஓவியத்திற்கு உண்டு. ஒரு கருத்தைப் பேச்சாலும் எழுத்தாலும் வெளிப்படுத்துவதைக் காட்டிலும் ஓர் ஓவியத்தால் மிக நுட்பமாகப் புரிய வைத்துவிட முடியும். அதனால்தான் ஓவியத்தை நுண்கலைகளுள் முதன்மையான ஒன்றாகக் கருதுகின்றனர். இத்தகைய சிறப்பு மிக்க ஓவியக்கலையைப் பற்றி அறிவோம்.

ஒரு விடுமுறை நாளன்று கண்ணனும் மணியும் அரசுப் பொருள்காட்சிக் கூடத்திற்குச் செல்கின்றனர். ஒவ்வோர் அரங்காகக் கண்டுகளித்தவாறே சென்று இறுதியில் ஓவியக்கூடத்தை அடைகின்றனர். அங்குள்ள அறிவிப்புப் பலகையைப் பார்க்கின்றனர்.

அறிவிப்புப் பலகை

ஓவியங்களைத் தொடாமல் பார்க்குமாறு கேட்டுக்கொள்கிறோம். ஓவியங்களுக்குக் கீழே உள்ள பொத்தானை அழுத்தினால் ஓவியங்கள் உங்களுடன் பேசும்.

கண்ணன் : மணி! இங்குக் குகை போன்று வடிவமைக்கப்பட்ட பாறையில் அழகான ஓவியங்கள் வரையப்பட்டு உள்ளன. அந்தப் பொத்தானை அழுத்து. குகை ஓவியம் பேசுவதைக் கேட்போம்.

(மணி பொத்தானை அழுத்துகிறான்)



குகை ஓவியம் : நான்தான் குகை ஓவியம் பேசுகிறேன். பழங்கால மனிதர்கள் குகைகளில்தான் வாழ்ந்து வந்தனர். அங்குதான் அவர்கள் முதலில் ஓவியங்களை வரையத் தொடங்கினார்கள். செய்திகளை மற்றவர்களுக்குத் தெரிவிப்பதற்காக எங்களை வரைந்தனர். வேட்டைக்குச் செல்லுதல், நடனம் ஆடுதல், போர் செய்தல் போன்ற காட்சிகள் வரையப்பட்டன. நாங்கள் பெரும்பாலும் கோட்டோவியமாக இருப்போம். மண் மற்றும் கல் துகள்களைக் கொண்டு எங்களுக்கு வண்ணம் தீட்டினர். எங்களை உற்று நோக்கினால் பழந்தமிழரின் வாழ்க்கை முறைகளை அறிந்து கொள்ளலாம்.

மணி : கண்ணா! இதோ இங்குள்ள சுவர் ஓவியத்தின் பொத்தானை அழுத்து.

7th Std - Tamil_2025_Term_II_Unit 2.indd 24 6/6/2025 12:29:52 PM

(கண்ணன் பொத்தானை அழுத்துகிறான்.)



சுவர் ஓவியம் : மனிதர்கள் வீடுகட்டி வாழத் தொடங்கிய காலம் முதல் சுவர் ஓவியங்களாகிய எங்களை வரைந்து வருகின்றனர். அரண்மனைகள், மண்டபங்கள், கோவில்கள் போன்றவற்றின் சுவர்களிலும் மேற்கூரைகளிலும் எங்களைக் காணமுடியும். சித்தன்னவாசலிலும் தஞ்சைப் பெரியகோயிலிலும் சுவர் ஓவியங்களான எங்களை ஏராளமாகக் காணமுடியும். அங்கு கருவறைச் சுற்றுச்சுவரிலும் மண்டபங்களின் சுவர்களிலும் நாங்கள் அழகாகக் காட்சியளிக்கிறோம்.

மணி : கண்ணா, வா! அதோ! அங்குள்ள துணி ஓவியங்களைப் பார்ப்போம்.

(துணி ஓவியத்தின் அருகிலுள்ள பொத்தானை மணி அழுத்துகிறான்.)

துணி ஓவியம் : துணிகளில் ஓவியங்கள் வரையும் முறை பழங்காலம் முதலே வழக்கத்தில் இருந்துள்ளது. ஓவியம் வரையப் பயன்படும் துணியை எழினி, திரைச்சீலை, கிழி, படாம் எனப் பல பெயர்களில் அழைப்பர். சீவகசிந்தாமணிக் காப்பியத்தில் குணமாலை என்னும் தலைவி யானையைக் கண்டு அஞ்சிய காட்சியைச் சீவகன் துணியில் வரைந்ததாகக் கூறப்பட்டுள்ளது. தற்காலத்தில் எங்களைக் கலம்காரி ஓவியங்கள் என்னும் பெயரில் தமிழகத்திலும் ஆந்திராவிலும் ஓவியர்கள் வரைந்து வருகின்றனர்.

கண்ணன் : மணி, வா! அந்த ஓலைச்சுவடி ஓவியத்தைப் பார்ப்போம்.

(கண்ணன் ஓலைச்சுவடி ஓவியத்தின் அருகிலுள்ள பொத்தானை அழுத்துகிறான்)



ஓலைச்சுவடி ஓவியம் : ஓலைச்சுவடிகள் மீது எழுத்தாணிகளைக் கொண்டு கோட்டோவியமாகவும் வண்ணப்பூச்சு ஓவியமாகவும் எங்களை வரைவார்கள். நாங்கள் பெரும்பாலும் இதிகாசம் மற்றும் புராணக் காட்சிகளாகவே இருக்கிறோம். தற்காலத்தில் எங்களைக் காண்பது அரிதாகிவிட்டது. தஞ்சாவூர் சரசுவதி மகால் நூலகத்திற்குச் சென்றால் எங்களைக் காணலாம்.

கண்ணன் : சரி, வா! செப்பேட்டுஓவியம் என்ன சொல்கிறது என்று கேட்போம்.

(மணி செப்பேட்டு ஓவியத்தின் அருகிலுள்ள பொத்தானை அழுத்துகிறான்)

செப்பேட்டு ஓவியம் : முற்காலத்தில் மன்னர்களின் ஆணைகளையும் அரசு ஆவணங்களையும் செப்பேடுகளில் பொறிப்பது வழக்கம். அதைப்போல உளிகொண்டு வரைகோடுகளாக எங்களையும் வரைந்தனர். பொதுவாக நீர்நிலைகள், செடிகொடிகள், பறவைகள், விலங்குகள், குறியீடுகள் போன்றவையாக எங்களைக் காணலாம்.

கண்ணன் : அங்கே சில புதுமையான ஓவியங்கள் காணப்படுகின்றனவே! வா! சென்று பார்க்கலாம்.

மணி : தந்த ஓவியங்கள் என்று குறிப்பிடப்பட்டுள்ளதே! இவை யார் தந்த ஓவியங்களாக இருக்கும்?

7th Std - Tamil_2025_Term_II_Unit 2.indd 25 6/6/2025 12:29:52 PM

(கண்ணன் தந்த ஓவியத்தின் அருகிலுள்ள பொத்தானை அழுத்துகிறான்)

தந்த ஓவியம் : நாங்கள் யானைத் தந்தங்களின் மீது வரையப்பட்ட ஓவியங்கள். வயது முதிர்ந்து இறந்த யானையின் தந்தங்களின்மீது பலவகை நீர்வண்ணங்களைப் பயன்படுத்தி அழகான ஓவியங்களாக எங்களை வரைவார்கள். எங்களைக் கேரள மாநிலத்தில் அதிகமாகக் காணமுடியும்.

கண்ணன் : வா! அங்கே உள்ள கண்ணாடி ஓவியங்களைப் பார்ப்போம்.

தெரிந்து தெளிவோம்

புனையா ஓவியங்கள் பற்றி நம் இலக்கியங்கள் கூறும் செய்திகள்

புனையா ஓவியம் கடுப்பப் புனைவில்
– நெடுநல்வாடை

புனையா ஓவியம் புறம் போந்தன்ன
–மணிமேகலை

(மணி கண்ணாடி ஓவியத்தின் அருகிலுள்ள பொத்தானை அழுத்துகிறான்.)



கண்ணாடி ஓவியம் : கண்ணாடிகள் முகம் பார்க்க மட்டும்தான் பயன்படும் என நினைத்திருப்பீர்கள். ஆனால், அழகிய வண்ண ஓவியங்களாகிய எங்களை வரையவும் கண்ணாடிகளைப் பயன்படுத்துகின்றனர். பலவகையான உருவங்கள், இயற்கைக் காட்சிகள் போன்றவைகளாக நாங்கள் வரையப்படுகிறோம். எங்களை உருவாக்கும் ஓவியர்கள் தஞ்சாவூரில் மிகுதியாக உள்ளனர்.

மணி : அடடா, ஓவியங்களில்தான் எத்தனை வகைகள்! இதோ! இருபதாம் நூற்றாண்டு ஓவியங்கள் என்னும் இறுதிப் பகுதிக்கு வந்துவிட்டோம். அதோ! அங்கே நாம் இப்போது வரைவது போலத் தாள்களில் வரையப்பட்ட ஓவியங்கள் உள்ளன. வா, சென்று பார்க்கலாம்.

(மணி தாள் ஓவியத்தின் அருகிலுள்ள பொத்தானை அழுத்துகிறான்)

தாள் ஓவியம் : தற்காலத்தில் பரவலான பயன்பாட்டில் இருப்பவர்கள் நாங்களே. கோட்டோவியங்கள், வண்ண ஓவியங்கள், நவீன ஓவியங்கள் எனப் பலவகையான வடிவங்களில் நாங்கள் காணப்படுகின்றோம். கரிக்கோல், நீர்வண்ணம், எண்ணெய் வண்ணம் ஆகியவற்றைப் பயன்படுத்தி எங்களை வரைகின்றனர்.

தெரிந்து தெளிவோம்

ஓவிய மண்டபத்தில் பல வகை ஓவியங்கள் வரையப்பட்டிருந்தன. ஓவியங்கள் குறித்து அறிந்தோர் அறியாதவர்களுக்கு விளக்கிக் கூறினர் என்ற செய்தி பரிபாடலில் இடம் பெற்றுள்ளது.

இன்ன பலபல எழுத்துநிலை மண்டபம்
துன்னுநர் சுட்டவும் சுட்டு அறிவுறுத்தவும்
– பரிபாடல் (19:54–55)

(கண்ணன் அருகிலிருந்த கருத்துப்பட ஓவியத்தின் பொத்தானை அழுத்துகிறான்.)

கருத்துப்பட ஓவியம் : அரசியல் கருத்துகளை எளிமையாக விளக்குவதற்கு நாங்கள் பயன்படுகிறோம். இந்தியா இதழில் பாரதியார்தான் எங்களை முதன்முதலில் தமிழில் அறிமுகப்படுத்தினார். இப்போது பெரும்பாலான இதழ்களில் நீங்கள் எங்களைப் பார்க்க முடியும். எங்களுடைய மற்றொரு வடிவமே கேலிச்சித்திரம் ஆகும். மனித

7th Std - Tamil_2025_Term_II_Unit 2.indd 26 6/6/2025 12:29:53 PM

உருவங்களை விந்தையான தோற்றங்களில் நகைச்சுவை தோன்றும்படி வரைவதையே கேலிச்சித்திரம் என்பர்.

(மணி நவீன ஓவியத்தின் அருகிலுள்ள பொத்தானை அழுத்துகிறான்)

நவீன ஓவியம் : ஓவியக்கலையின் மிகப் புதுமையான வடிவமாக நாங்கள் விளங்குகிறோம். புதுமையான பார்வையில் புதிய கருத்துகள் வெளிப்படுமாறு எங்களை வரைகின்றனர். பார்வையாளர்களின் மனப்பான்மைக்கு ஏற்பப் பொருள்கொள்ளும் வகையில் கோடுகளாகவும் கிறுக்கல்களாகவும் நாங்கள் வரையப்படுகிறோம். பல வண்ணக் கலவைகளைக் கொண்டும் எங்களை வரைகின்றனர்.

மணி : இந்தக் கண்காட்சியின் மூலம் பலவகையான ஓவியங்களைப் பற்றி அறிந்து கொண்டோம்.

கண்ணன் : அதிலும் ஓவியங்களே நம்மோடு பேசியது மிகமிகச் சிறப்பாக இருந்தது. இந்த நாளை நம்மால் மறக்கவே முடியாது! நாமும் சிறந்த ஓவியங்களை வரைந்து பழகுவோம்.

தெரிந்து தெளிவோம்

ஐரோப்பியக் கலை நுணுக்கத்துடன் இந்தியக் கதை மரபுகளை இணைத்து ஓவியங்களில் புதுமைகளைப் புகுத்தியவர் இராஜா இரவிவர்மா. இவரது ஓவியமுறைகள் பிற்காலத்தில் நாட்காட்டிகளில் அதிகம் பயன்படுத்தப்பட்டன. நாட்காட்டி ஓவியம் வரையும் முறையின் முன்னோடிகளுள் ஒருவராகக் கருதப்படுபவர் கொண்டையராஜு. நாட்காட்டி ஓவியங்களைப் பசார் பெயிண்டிங் என்றும் அழைப்பர்



பாரதியார் வெளியிட்ட கேலிச்சித்திரம்

தெரிந்து தெளிவோம் — வேறுபெயர்களை அறிவோம்

ஓவியம்	ஓவு, ஓவியம், ஓவம், சித்திரம், படம், படாம், வட்டிகைச்செய்தி
ஓவியம் வரைபவர்	கண்ணுள் வினைஞர், ஓவியப் புலவர், ஓவமாக்கள், கிளவி வல்லோன், சித்திரக்காரர், வித்தகர்
ஓவியக் கூடம்	எழுதெழில் அம்பலம், எழுத்துநிலை மண்டபம், சித்திர அம்பலம், சித்திரக்கூடம், சித்திரமாடம், சித்திரமண்டபம், சித்திர சபை

கற்பவை கற்றபின்

1. உமக்குப் பிடித்த காட்சியை வரைந்து வண்ணம் தீட்டுக.
2. பருவ இதழ்களில் வெளிவந்த பலவகை ஓவியங்களைச் சேகரித்துப் படத்தொகுப்பு உருவாக்குக.

7th Std - Tamil_2025_Term_II_Unit 2.indd 27 6/6/2025 12:29:53 PM



மதிப்பீடு

சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. குகை ஓவியங்களில் வண்ணம் தீட்டப் பயன்பட்ட பொருள்களில் ஒன்று _ _ _ _ _ _ _.

   அ) மண்துகள் ஆ) நீர் வண்ணம் இ) எண்ணெய் வண்ணம் ஈ) கரிக்கோல்

2. நகைச்சுவை உணர்வு வெளிப்படுமாறு வரையப்படும் ஓவியம் _ _ _ _ _ _ _ _.

   அ) குகை ஓவியம் ஆ) சுவர் ஓவியம்

   இ) கண்ணாடி ஓவியம் ஈ) கேலிச்சித்திரம்

3. 'கோட்டோவியம்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது _ _ _ _ _ _ _ _.

   அ) கோடு + ஓவியம் ஆ) கோட்டு + ஓவியம்

   இ) கோட் + டோவியம் ஈ) கோடி + ஓவியம்

4. 'செப்பேடு' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது _ _ _ _ _ _ _ _.

   அ) செப்பு + ஈடு ஆ) செப்பு + ஓடு

   இ) செப்பு + ஏடு ஈ) செப்பு + யேடு

5. எழுத்து + ஆணி என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் _ _ _ _ _ _ _ _.

   அ) எழுத்துஆணி ஆ) எழுத்தாணி இ) எழுத்துதாணி ஈ) எழுதாணி

கோடிட்ட இடங்களை நிரப்புக.

1. கருத்துப் படங்களை அறிமுகப்படுத்தியவர் _ _ _ _ _ _ _.
2. கலம்காரி ஓவியம் என்று அழைக்கப்படுவது _ _ _ _ _ _ _.
3. மன்னர்களின் ஆணைகளையும் அரசு ஆவணங்களையும் _ _ _ _ _ மீது பொறித்துப் பாதுகாத்தனர்.

குறுவினா

1. ஓவியங்களின் வகைகள் யாவை?
2. குகை ஓவியங்களில் இருந்து நாம் அறியும் செய்திகள் யாவை?
3. தாள் ஓவியங்களை எவற்றைக் கொண்டு வரைவர்?
4. சுவர் ஓவியங்கள் காணப்படும் இடங்களைக் கூறுக.
5. செப்பேட்டு ஓவியங்களில் காணப்படும் காட்சிகள் யாவை?

சிறுவினா

1. கேலிச்சித்திரம் என்றால் என்ன?
2. ஓலைச்சுவடி ஓவியங்கள் குறித்து நீங்கள் அறிந்து கொண்டவற்றை எழுதுக.

சிந்தனை வினா

தந்த ஓவியங்கள் கேரளாவில் அதிகம் காணப்படுவது ஏன்?

7th Std - Tamil_2025_Term_II_Unit 2.indd 28 6/6/2025 12:29:53 PM

விரிவானம்

இயல் இரண்டு

தமிழ் ஒளிர் இடங்கள்

நுழையும்முன்

மனிதர்கள் புதிய புதிய இடங்களைக் காண்பதில் விருப்பம் உடையவர்கள். பழமையான நினைவுச் சின்னங்கள், இயற்கை அழகு நிறைந்த பகுதிகள், வழிபாட்டு இடங்கள், கடற்கரைப் பகுதிகள், தேசியப் பூங்காக்கள் போன்ற இடங்களைக் காண்பது உள்ளத்துக்கு மகிழ்ச்சியைத் தரும். அவற்றுள் தமிழின் பெருமையை விளக்கும் இடங்கள் சிலவற்றை அறிவோம்.

அன்பு மாணவர்களே! புத்தகங்களில் பல வகை உண்டு. கதைப் புத்தகங்கள், கட்டுரைப் புத்தகங்கள், கவிதைப் புத்தகங்கள் ஆகியவை நீங்கள் அறிந்தவையே. இது தமிழுடன் தொடர்புடைய இடங்கள் குறித்த கையேடு. இக்கையேடு அத்தகைய இடங்களை நேரில் காண வேண்டும் என்ற ஆர்வத்தைத் தூண்டும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

தஞ்சை சரசுவதி மகால் நூலகம்



இந்தியாவில் உள்ள தொன்மையான நூலகங்களுள் தஞ்சை சரசுவதி மகால் நூலகமும் ஒன்று. இந்நூலகம் பொ.ஆ. (கி.பி.) 1122 முதல் இயங்கி வருவதாகக் கல்வெட்டுச் செய்திகள் கூறுகின்றன. இங்குத் தமிழ், தெலுங்கு உள்ளிட்ட பல்வேறு மொழிகளின் ஓலைச் சுவடிகளும் கையெழுத்துப் படிகளும் உள்ளன. தலைசிறந்த ஓவியங்களும் தொன்மையான இசைக் கருவிகளும் சிற்பங்களும் இங்கு இடம்பெற்றுள்ளன.

7th Std - Tamil_2025_Term_II_Unit 2.indd 29 6/6/2025 12:29:53 PM

தமிழ்ப் பல்கலைக்கழகம் – தஞ்சாவூர்



செம்மொழியாகிய தமிழுக்கு ஒரு பல்கலைக்கழகம் அமைய வேண்டும் என்ற எண்ணத்தின் அடிப்படையில் தமிழக அரசால் 1981இல் தோற்றுவிக்கப்பட்டது தமிழ்ப்பல்கலைக்கழகம். இது தஞ்சாவூரில் ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பில் அமைக்கப்பட்டுள்ளது. வானத்தில் இருந்து பார்க்கும் பொழுது "தமிழ்நாடு" எனத் தெரியும் வகையில் இதன் கட்டட அமைப்பு உள்ளது. இந்திய நாகரிகத்தின் பண்பாட்டுக் கூறுகள் அனைத்தையும் விரிவாகவும் ஆழமாகவும் ஆராய வேண்டும் என்பதே இப்பல்கலைக்கழகத்தின் நோக்கம்.

இங்குக் கலைப்புலம், சுவடிப்புலம், வளர்தமிழ்ப்புலம், மொழிப்புலம், அறிவியல்புலம் ஆகிய ஐந்து புலங்களும் இருபத்தைந்து துறைகளும் உள்ளன. இப்பல்கலைக்கழகம் தமிழ்மொழி ஆய்வுகள் செய்வது மட்டுமன்றி, சித்த மருத்துவத்துறை மூலம் பொதுமக்களுக்குப் பயனுள்ள வகையில் மருத்துவத் தொண்டு செய்து வருகிறது. இந்திய ஆட்சிப்பணி பயிற்சியாளர்களுக்குத் தமிழ்மொழிப்பயிற்சியை இப்பல்கலைக்கழகமே வழங்குகிறது. இங்கு மிகப்பெரிய நூலகம் ஒன்று அமைந்துள்ளது. உலகின் பல்வேறு நாடுகளைச் சேர்ந்த ஏராளமான மாணவர்கள் இங்குக் கல்வி கற்று வருகின்றனர்.

உ.வே.சா நூலகம் – சென்னை

பொ.ஆ. (கி.பி.) 1943இல் தொடங்கப்பட்ட இந்நூலகத்தில் தமிழ், தெலுங்கு, வடமொழி உள்ளிட்ட பல்வேறு மொழி நூல்கள் உள்ளன. இங்கு 2128 ஓலைச்சுவடிகளும் 2941 தமிழ் நூல்களும் உள்ளன.

கீழ்த்திசை நூலகம் – சென்னை

இந்நூலகம் பொ.ஆ. (கி.பி.) 1869ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. இங்குத் தமிழ், தெலுங்கு, கன்னடம், மராத்தி உள்ளிட்ட பல்வேறு மொழிகளின் ஓலைச்சுவடிகள் உள்ளன. கணிதம், வானியல், மருத்துவம், வரலாறு உள்ளிட்ட பல்வேறு துறை நூல்களும் இடம்பெற்றுள்ளன. இது தற்போது அண்ணா நூற்றாண்டு நூலகத்தின் ஏழாம் தளத்தில் இயங்கி வருகின்றது.

7th Std - Tamil_2025_Term_II_Unit 2.indd 30 6/6/2025 12:29:53 PM

கன்னிமாரா நூலகம் – சென்னை

பொ.ஆ. (கி.பி.) 1896இல் தொடங்கப்பட்ட கன்னிமாரா நூலகம் தமிழ்நாட்டின் மைய நூலகம் ஆகும். இஃது இந்திய நாட்டின் களஞ்சிய நூலகங்களில் ஒன்றாகவும் விளங்குகிறது. இந்நூலகத்தில் ஆறு இலட்சத்திற்கும் மேற்பட்ட நூல்கள் உள்ளன. இந்தியாவில் வெளியிடப்படும் புத்தகங்கள், நாளிதழ்கள், பருவ இதழ்கள் ஆகியவற்றின் ஒரு படி (பிரதி) இங்குப் பாதுகாக்கப்படுகிறது. இந்நூலகத்தின் மூன்றாம் தளத்தில் மறைமலை அடிகள் நூலகமும் செயல்பட்டு வருகின்றது.



வள்ளுவர் கோட்டம் – சென்னை

திருவள்ளுவரின் புகழை உலகறியச் செய்யும் வகையில் சென்னை நுங்கம்பாக்கத்தில் வள்ளுவர் கோட்டம் (1976) என்னும் கலைக்கூடம் அமைக்கப்பட்டுள்ளது. இது திருவாரூர்த் தேர் போன்ற வடிவில் அமைக்கப்பட்டு அதனை இரண்டு யானைகள் இழுத்துச் செல்வது போன்று கருங்கற்களால் உருவாக்கப்பட்டுள்ளது. இதன் அடிப்பகுதி இருபத்தைந்து அடி நீளமும் இருபத்தைந்து அடி அகலமும் உடையது. தேரின் மொத்த உயரம் 128 அடி. இரண்டு பக்கங்களிலும் பக்கத்திற்கு நான்கு சக்கரங்கள் தனிக்கற்களால் அமைக்கப்பட்டுள்ளன. தேரின் மையத்தில் உள்ள எண்கோண வடிவக் கருவறையில் திருவள்ளுவரின் சிலை கவினுற அமைக்கப்பட்டுள்ளது. வள்ளுவர் கோட்டத்தில் நிகழ்ச்சிகள் நடத்துவதற்கான அரங்கம் ஒன்றும் உள்ளது. வள்ளுவர் கோட்டத்தில் 1330 குறட்பாக்களும் செதுக்கப்பட்டுள்ளன. அறத்துப்பால் கருநிறப் பளிங்குக் கல்லிலும் பொருட்பால் வெண்ணிறப் பளிங்குக் கல்லிலும் இன்பத்துப்பால் செந்நிறப் பளிங்குக் கல்லிலும் அழகாகப் பொறிக்கப்பட்டுள்ளன. மேலும் திருக்குறளின் கருத்துகளை விளக்கும் ஓவியங்களும் வரையப்பட்டுள்ளன.



7th Std - Tamil_2025_Term_II_Unit 2.indd 31 6/6/2025 12:29:54 PM

திருவள்ளுவர் சிலை – கன்னியாகுமரி



இந்தியாவின் தெற்கு எல்லையாகிய கன்னியாகுமரியில் திருவள்ளுவரின் சிலை தமிழக அரசால் நிறுவப்பட்டுள்ளது. விவேகானந்தர் பாறைக்கு அருகில், கடல் நடுவே நீர் மட்டத்திலிருந்து முப்பது அடி உயரப் பாறை மீது இச்சிலை அமைக்கப்பட்டுள்ளது. பொ.ஆ. 2000ஆம் ஆண்டு சனவரித் திங்கள் முதல் நாள் அன்று திறந்துவைக்கப்பட்டது. பாறையிலிருந்து சிலையின் உயரம் மொத்தம் 133 அடி. இது திருக்குறளின் மொத்த அதிகாரங்களைக் குறிக்கிறது. அறத்துப்பாலின் அதிகாரங்களை உணர்த்துவதுபோல் பீடம் முப்பத்தெட்டு அடி உயரம் கொண்டதாக அமைக்கப்பட்டுள்ளது. பொருட்பால், இன்பத்துப்பால் ஆகியவற்றின் மொத்த அதிகாரங்களைக் குறிக்கும் வகையில் சிலை தொண்ணூற்றைந்து அடி உயரம் உடையதாக அமைக்கப்பட்டுள்ளது.

பீடத்தின் உட்புறத்தில் மண்டபம் ஒன்று அமைந்துள்ளது. மண்டபத்தின் உட்சுவரில் அதிகாரத்திற்கு ஒரு குறள் வீதம் 133 குறட்பாக்கள் தமிழிலும் ஆங்கிலத்திலும் செதுக்கப்பட்டுள்ளன. திருவள்ளுவர் சிலை அமைப்பதற்கு மூன்று டன் முதல் எட்டு டன் வரை எடை உள்ள 3,681 கருங்கற்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. திருவள்ளுவர் சிலை மொத்தம் ஏழாயிரம் டன் எடை கொண்டது. திருவள்ளுவர் சிலைக்குச் செல்வதற்குப் படகு வசதி செய்யப்பட்டுள்ளது. உள்நாட்டிலிருந்தும் வெளிநாட்டிலிருந்தும் ஏராளமான சுற்றுலாப் பயணிகள் இங்கு நாள்தோறும் வந்து செல்கின்றனர். தமிழின் பெருமைமிகு அடையாளமாக இச்சிலை உயர்ந்து நிற்கிறது.

உலகத் தமிழ்ச் சங்கம் – மதுரை

மதுரை மாநகரின் தல்லாகுளம் பகுதியில் காந்தி அருங்காட்சியகம் அருகில் உலகத் தமிழ்ச் சங்கம் நிறுவப்பட்டுள்ளது. இது சுமார் எண்பத்தேழு ஆயிரம் சதுரஅடி பரப்பளவில் மனத்தைக் கவரும் வகையில் கட்டப்பட்டுள்ளது. 1981ஆம் ஆண்டு மதுரையில் நடைபெற்ற உலகத்தமிழ் மாநாட்டில் மதுரையில் உலகத் தமிழ்ச் சங்கம் நிறுவப்படும் என்று அறிவிக்கப்பட்டது. அதன்படி இக்கட்டடம் கட்டப்பட்டு

7th Std - Tamil_2025_Term_II_Unit 2.indd 32 6/6/2025 12:29:54 PM



2016ஆம் ஆண்டு திறந்துவைக்கப்பட்டது. இதனுள் பன்னாட்டு அளவிலான கருத்தரங்கக் கூடங்கள், ஆய்வரங்கங்கள், நூலகம், பார்வையாளர் அரங்கம் ஆகியன கவினுற அமைக்கப்பட்டுள்ளன. வெளிப்புறச் சுற்றுச்சுவர்களில் 1330 குறட்பாக்களும் இடம்பெற்றுள்ளன.

உலகத் தமிழ்ச் சங்கத்தின் மற்றோர் அமைப்பான சங்கத்தமிழ்க் காட்சிக்கூடம் தனிக்கட்டடத்தில் இயங்கி வருகிறது. இக்காட்சிக்கூடத்தில் வள்ளல்கள், புலவர்கள் ஆகியோரின் வாழ்க்கை நிகழ்வுகள் ஓவியங்களாகவும் சிற்பங்களாகவும் உள்ளன. தொல்காப்பியர், ஔவையார், கபிலர் ஆகியோரின் முழுஉருவ வெண்கலச் சிலைகள் நிறுவப்பட்டுள்ளன. மேலும், இதன் சுற்றுச் சுவர்களில் சங்க இலக்கியக் காட்சிகள் வண்ண ஓவியங்களாக வரையப்பட்டுள்ளன. மூன்றாம் தமிழ்ச்சங்கம் அமைந்த மதுரையில் உலகத் தமிழ்ச் சங்கக் கட்டடமும் சங்கத்தமிழ்க் காட்சிக்கூடமும் தமிழின் பெருமையைப் பறைசாற்றி நிற்கின்றன.

சிற்பக் கலைக்கூடம் – பூம்புகார்

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் சோழர்களின் தலைநகரமாகவும் துறைமுக நகரமாகவும் விளங்கியது பூம்புகார். இந்நகரைப் பற்றிய செய்திகள் சிலப்பதிகாரத்திலும் பட்டினப்பாலையிலும் இடம்பெற்றுள்ளன. பின்னர் ஏற்பட்ட கடல்கோளினால் பூம்புகார் நகரம் அழிந்துவிட்டது. இந்நகரத்தின் பெருமையை உலகறியச் செய்ய 1973ஆம் ஆண்டு பூம்புகார் கடற்கரையில் சிற்பக் கலைக்கூடம் ஒன்று ஏற்படுத்தப்பட்டது. இக்கூடம் ஏழுநிலை மாடங்களைக் கொண்டது. கண்ணகியின் வரலாற்றை விளக்கும் நாற்பத்தொன்பது சிற்பத் தொகுதிகள் இதில் இடம்பெற்றுள்ளன. மாதவிக்கும் ஒரு நெடிய சிலை இங்கு நிறுவப்பட்டுள்ளது.

7th Std - Tamil_2025_Term_II_Unit 2.indd 33 6/6/2025 12:29:54 PM



கலைக்கூடத்திற்கு அருகில் இலஞ்சிமன்றம், பாவைமன்றம், நெடுங்கல்மன்றம் ஆகியன அமைந்துள்ளன. நெடுங்கல் மன்றத்தில் நெடிய கற்றூண் ஒன்றும் அதைச் சுற்றி எட்டுச் சிறிய கற்றூண்களும் எட்டு மனித உருவங்களும் தற்காலச் சிற்பக்கலைக்கு எடுத்துக்காட்டுகளாய் நிற்கின்றன.

இக்கையேட்டில் நாம் கண்ட பகுதிகள் அனைத்தும் தமிழின் பெருமையை உலகறியச் செய்ய நிறுவப்பட்டவை ஆகும். இவற்றைக் காணும் பொழுது தமிழரின் வாழ்வையும் தமிழ்மொழியின் சிறப்பையும் அறிய முடிகிறது. இத்தகைய சிறப்புமிக்க இடங்களுக்குச் சென்று பார்வையிடுவதும் அவற்றைப் பாதுகாப்பதும் தமிழராகிய நம்முடைய கடமை ஆகும்.

கற்பவை கற்றபின்

1. உங்கள் மாவட்டத்திலுள்ள சுற்றுலா இடங்களின் சிறப்புகளை எழுதி வருக.
2. நீங்கள் கண்டுகளித்த இடங்களின் தனித்தன்மைகளை எழுதுக.

மதிப்பீடு

நீங்கள் சுற்றுலா வழிகாட்டியாக இருந்தால், வள்ளுவர் கோட்டம்/திருவள்ளுவர் சிலை போன்றவற்றைப் பார்வையிட வருபவர்களுக்கு எவ்வாறு விளக்கிக் கூறுவீர்கள்?

7th Std - Tamil_2025_Term_II_Unit 2.indd 34 6/6/2025 12:29:54 PM

கற்கண்டு

இயல் இரண்டு

தொழிற்பெயர்

உழவர் செய்யும் தொழில் உழுதல். தையல்காரர் செய்யும் தொழில் தைத்தல். இத்தொடர்களில் உழுதல், தைத்தல் என்பன செயல்களின் பெயர்களாக அமைகின்றன. இவ்வாறு ஒரு செயலின் அல்லது வினையின் பெயராக அமைவது தொழிற்பெயர் எனப்படும். தொழிற்பெயர் எண், இடம், காலம், பால் ஆகியவற்றைக் காட்டாது. படர்க்கை இடத்தில் மட்டும் வரும்.

(எ.கா.) படித்தல், ஆடல், நடிப்பு, எழுதுதல், பொறுத்தல்

தொழிற்பெயரை விகுதி பெற்ற தொழிற்பெயர், முதல்நிலைத் தொழிற்பெயர், முதல்நிலை திரிந்த தொழிற்பெயர் என வகைப்படுத்துவர்.

விகுதி பெற்ற தொழிற்பெயர்

நடத்தல், உண்ணல், வாழ்வு, வாழ்க்கை ஆகிய பெயர்களைக் கவனியுங்கள். இவற்றில் நட, உண், வாழ் ஆகிய வினைப்பகுதிகள் தல், அல், வு, கை ஆகிய விகுதிகளோடு சேர்ந்து தொழிற்பெயர்களாக அமைகின்றன.

இவ்வாறு வினைப்பகுதியுடன் தொழிற்பெயர் விகுதி சேர்ந்து வருவது விகுதி பெற்ற தொழிற்பெயராகும்.

தல், அல், அம், ஐ, கை, வை, கு, பு, வு, தி, சி, வி, மை போன்றவை தொழிற்பெயர் விகுதிகளாக வரும்.

(எ.கா.)

தருதல் – தல்
கூறல் – அல்
ஆட்டம் – அம்
விலை – ஐ
வருகை – கை
பார்வை– வை
போக்கு – கு
நட்பு– பு
மறைவு – வு
மறதி– தி
உணர்ச்சி– சி
கல்வி– வி
செய்யாமை – மை

முதல்நிலைத் தொழிற்பெயர்

வானில் இடி இடித்தது

சோறு கொதி வந்தது

இடி, கொதி என்னும் சொற்கள் இடித்தல், கொதித்தல் என்னும் சொற்களின் பகுதிகளாகும். இவ்வாறு ஏவல் ஒருமை வினையாக அமையும் வினைச்சொற்களின் பகுதியை முதல்நிலை என்பர். பகுதியாகிய முதல்நிலை எவ்வகை மாற்றமும் பெறாமல் தொழிற்பெயராக அமைவது முதல்நிலைத் தொழிற்பெயர் எனப்படும்.

7th Std - Tamil_2025_Term_II_Unit 2.indd 35 6/6/2025 12:29:54 PM

(எ.கா.) உணவை ஒரு பிடி பிடித்தான்.

அறிஞர் அண்ணா தம் பேச்சால் புகழ் பெற்றார்.

இவற்றில் அடிக்கோடிட்ட சொற்கள் விகுதி பெறாமல் தம்பொருளை உணர்த்துகின்றன.

முதல்நிலை திரிந்த தொழிற்பெயர்

தமிழ் படிக்கும் பேறு பெற்றேன்.

உணவின் சூடு குறையவில்லை.

இத்தொடர்களில் பேறு, சூடு ஆகிய சொற்களைக் கவனியுங்கள். பெறு, சுடு என்னும் பகுதிகளின் முதலெழுத்து நீண்டு, பேறு, சூடு எனத் திரிந்து தொழிற்பெயர்களாக மாறி உள்ளன. இவ்வாறு பகுதியாகிய முதல்நிலை திரிவதால் உருவாகும் தொழிற்பெயர் முதல்நிலை திரிந்த தொழிற்பெயர் எனப்படும்.

(எ.கா.) விடு – வீடு, மின் – மீன், கொள் – கோள்



கற்பவை கற்றபின்

பேசும் ஓவியங்கள் பாடப்பகுதியில் இடம் பெற்றுள்ள தொழில்பெயர்களைக் கண்டறிந்து தொகுக்க.



மதிப்பீடு

சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. பின்வருவனவற்றுள் விகுதி பெற்ற தொழிற்பெயர் _ _ _ _ _ _ _ _ _ _.

   அ) எழுது ஆ) பாடு இ) படித்தல் ஈ) நடி

2. பின்வருவனவற்றுள் முதல்நிலை திரிந்த தொழிற்பெயர் _ _ _ _ _ _ _ _ _ _.

   அ) ஊறு ஆ) நடு இ) விழு ஈ) எழுதல்

பொருத்துக.

1. ஓட்டம் – முதல்நிலைத் தொழிற்பெயர்
2. பிடி – முதல்நிலை திரிந்த தொழிற்பெயர்
3. சூடு – விகுதி பெற்ற தொழிற்பெயர்

குறுவினா

1. வளர்தல் என்பது எவ்வகைப் பெயர்? விளக்கம் தருக.
2. முதல்நிலை திரிந்த தொழிற்பெயர் என்றால் என்ன? சான்று தருக.

7th Std - Tamil_2025_Term_II_Unit 2.indd 36 6/6/2025 12:29:54 PM

மொழியை ஆள்வோம்!

கேட்க.

கோட்டோவியம் பற்றிய செய்திகளை உங்கள் பள்ளி ஓவிய ஆசிரியரிடம் கேட்டு அறிக.

பேசுக.

நீங்கள் கண்டு வியந்த ஓவியங்கள் மற்றும் சிற்பங்கள் பற்றி வகுப்பறையில் பேசுக.

கவிதையை நிறைவு செய்க.

வானும் நிலவும் அழகு

வயலும் _

_ _

_ அழகு

படம் உணர்த்தும் கருத்தை ஐந்து வரிகளில் எழுதுக.



_ _

_ _

_ _

_ _

_ _

கொடுக்கப்பட்டுள்ள சொற்களை ஒரு தொடரில் முதல் மற்றும் இறுதிச்சொல்லாகக் கொண்டு சொற்றொடர் உருவாக்குக.

(ஓவியக்கலை, இசை, கட்டடக்கலை, வண்ணங்கள்)

(எ.கா.) ஓவியக்கலை கண்ணையும் கருத்தையும் கவர்கிறது.

நுண்கலைகளுள் ஒன்று ஓவியக்கலை.

சொல்லக் கேட்டு எழுதுக.

1. வண்ணங்கள் பயன்படுத்தாமல் வரைவது புனையா ஓவியம்.
2. ஆற்று மணலுடன் சுண்ணாம்பைச் சேர்த்துச் சுவரைச் சமப்படுத்துவர்.
3. வள்ளுவர் கோட்டத்தின் அமைப்பு திருவாரூர்த் தேர் போன்றது.
4. தொழிற்பெயர் எண், இடம், காலம், பால் ஆகியவற்றைக் காட்டாது.
5. கற்க வேண்டியவற்றைப் பிழை இல்லாமல் கற்க வேண்டும்.

7th Std - Tamil_2025_Term_II_Unit 2.indd 37 6/6/2025 12:29:54 PM

இடைச்சொல் 'கு' சேர்த்துத் தொடரை எழுதுக.

(எ.கா.) வீடு சென்றான் – வீடு+கு+சென்றான் – வீட்டுக்குச் சென்றான்

1. மாடு புல் கொடுத்தார் 2. பாட்டு பொருள் எழுது 3. செடி பாய்ந்த நீர்

4. முல்லை தேர் தந்தான் பாரி 5. சுவர் சாந்து பூசினாள்

கீழ்க்காணும் குறிப்புகளைக் கொண்டு கட்டுரை எழுதுக.

எங்கள் ஊர்

(முன்னுரை – அமைவிடம் – பெயர்க்காரணம் – தொழில்கள் – சிறப்பு மிகு இடங்கள்– திருவிழாக்கள் – மக்கள் ஒற்றுமை – முடிவுரை)



மொழியோடு விளையாடு

பின்வரும் பத்திகளைப் படித்து, கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடையளிக்க.

சாலை விபத்துகளைத் தவிர்க்கச் சாலைவிதிகளை அறிந்து ஒவ்வொருவரும் வாகனங்களை ஓட்ட வேண்டும்.

சாலையில் வாகனங்களை இடப்புறமாகவே செலுத்த வேண்டும். இருவழிச் சாலையின் மையத்தில் விட்டுவிட்டுப் போடப்பட்டுள்ள வெள்ளைக்கோடு இரு போக்குவரத்துக்காகச் சாலை சரிசமமாகப் பிரிக்கப்பட்டுள்ளதைக் குறிக்கும். வாகனங்களை முந்துவதற்குக் கோட்டுக்கு வலது பக்கம் உள்ள சாலையைப் பயன்படுத்திக் கொள்ள அனுமதி உண்டு. இருவழிச் சாலையின் மையத்தில் தொடர்ச்சியாக வெள்ளை அல்லது மஞ்சள் கோடு வரையப்பட்டிருந்தால் முந்துவதற்கு வலது பக்கச் சாலையைப் பயன்படுத்தக்கூடாது. இரட்டை மஞ்சள்கோடு வரையப்பட்டிருந்தால் முந்துவதற்கு எக்காரணம் கொண்டும் வலது பக்கச் சாலையைப் பயன்படுத்தக் கூடாது.

ஒருவழிப்பாதை என்று குறிப்பிடப்பட்டுள்ள சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள திசையில் மட்டுமே வாகனங்களைச் செலுத்த வேண்டும். தடக்கோடுகள் இடப்பட்டுள்ள சாலையில் தடத்தின் உள்ளேயே வாகனங்களைச் செலுத்த வேண்டும். வாகனத்தைப் பின்தொடரும்போது மிகவும் நெருக்கமாகப் பின்தொடரக் கூடாது. திரும்பும் போது சைகை காட்ட அடையாள விளக்கை ஒளிரச் செய்ய வேண்டும்.

வினாக்கள்

1. சாலையின் எந்தப் பக்கமாக வாகனங்களைச் செலுத்த வேண்டும்?
2. விட்டுவிட்டுப் போடப்படும் வெள்ளைக்கோடு எதனைக் குறிக்கும்?
3. எந்தக் கோட்டைத் தாண்டி வாகனங்களை முந்திச் செல்ல அனுமதி இல்லை?
4. ஒருவழிப் பாதை எனப்படுவது யாது?
5. வாகனங்களைப் பின்தொடர்வதற்கான முறையைக் கூறுக.

7th Std - Tamil_2025_Term_II_Unit 2.indd 38 6/6/2025 12:29:54 PM

கட்டங்களை நிரப்புக.

வேர்ச்சொல்	இறந்தகாலம்	நிகழ்காலம்	எதிர்காலம்
நட	நடந்தாள்	நடக்கிறாள்	நடப்பாள்
எழுது			
ஓடு			
சிரி			
பிடி			
இறங்கு			

குறிப்புகளைக் கொண்டு 'மா' என்னும் எழுத்தில் தொடங்கும் சொற்களைக் கண்டறிந்து கட்டங்களை நிரப்புக.

1. முக்கனிகளுள் ஒன்று

2. கதிரவன் மறையும் நேரம்

3. பெருந்திரளான மக்கள் கூடும் நிகழ்வு

4. எழுத்துகளை ஒலிக்க ஆகும் கால அளவு

5. அளவில் பெரிய நகரம்



நிற்க அதற்குத் தக...

என் பொறுப்புகள்....

1. கலைச் சின்னங்களைப் பாதுகாப்பேன்.
2. தமிழகச் சுற்றுலாச் சிறப்பு வாய்ந்த இடங்களுக்குச் சென்று தமிழர்தம் கலைத்திறனை அறிந்து போற்றுவேன்.

படிப்போம்; பயன்படுத்துவோம்!

அழகியல் – *Aesthetics*

கருத்துப்படம் – *Cartoon*

நவீன ஓவியம் – *Modern Art*

தூரிகை – *Brush*

குகை ஓவியங்கள் – *Cave paintings*

7th Std - Tamil_2025_Term_II_Unit 2.indd 39 6/6/2025 12:29:55 PM

இயல் இரண்டு

திருக்குறள்

கல்வி

1. *கற்க கசடறக் கற்பவை கற்றபின்*
   நிற்க அதற்குத் தக.
   பொருள் : கற்க வேண்டியவற்றைப் பிழை இல்லாமல் கற்க வேண்டும். கற்றபின் கற்ற வழியில் நடக்க வேண்டும்.

2. *எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்*
   கண்ணென்ப வாழும் உயிர்க்கு.
   பொருள் : எண்ணும் எழுத்தும் வாழும் மக்களுக்குக் கண்கள் போன்றவை.

3. *தொட்டனைத்து ஊறும் மணற்கேணி மாந்தர்க்குக்*
   *கற்றனைத்து ஊறும் அறிவு.**
   பொருள் : தோண்டும் அளவிற்கு ஏற்ப மணற்கேணியில் நீர் ஊறும். அதுபோல் கற்கும் அளவிற்கு ஏற்ப மக்களுக்கு அறிவு வளரும்.
   அணி : எடுத்துக்காட்டு உவமை அணி

4. *கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு*
   மாடல்ல மற்றை யவை.
   பொருள் : அழிவில்லாத சிறந்த செல்வம் கல்வியே. ஒருவருக்கு அதனைவிடச் சிறந்த செல்வம் வேறு இல்லை.

தெரிந்து செயல்வகை

5. *செய்தக்க அல்ல செயக்கெடும் செய்தக்க*
   செய்யாமை யானும் கெடும்.
   பொருள் : செய்யத்தகாத செயல்களைச் செய்வதாலும் செய்யத்தக்க செயல்களைச் செய்யாமல் விடுவதாலும் தீமை உண்டாகும்.

6. *எண்ணித் துணிக கருமம் துணிந்தபின்*
   *எண்ணுவம் என்பது இழுக்கு.**
   பொருள் : எந்தச் செயலையும் நன்கு சிந்தித்த பின் தொடங்க வேண்டும். தொடங்கிய பின் எண்ணிப் பார்க்கலாம் என்பது குற்றமாகும்.

7th Std - Tamil_2025_Term_II_Unit 2.indd 40 6/6/2025 12:29:55 PM

7. *நன்றாற்றல் உள்ளும் தவறுண்டு அவரவர்*
பண்பறிந்து ஆற்றாக் கடை.

பொருள் : நாம் ஒருவருடைய பண்பை அறிந்து அவருக்கு நன்மை செய்ய வேண்டும். இல்லாவிட்டால் நன்மை செய்தாலும் தீமை வந்து சேரும்.

சுற்றந்தழால்

8. *காக்கை கரவா கரைந்துண்ணும் ஆக்கமும்*
அன்ன நீரார்க்கே உள.

பொருள் : காகம் தனக்குக் கிடைத்ததை மறைக்காமல் தன் சுற்றத்தைக் கூவி அழைத்து உண்ணும். அத்தகைய பண்பு உடையவர்களிடமே செல்வமும் சேரும்.

மடியின்மை

9. *மடியை மடியா ஒழுகல் குடியைக்*
குடியாக வேண்டு பவர்.

பொருள் : தம் குடியைச் சிறப்புடைய குடியாகச் செய்ய விரும்புபவர், சோம்பலைத் துன்பமாகக் கருதி முயற்சியோடு வாழ்தல் வேண்டும்.

இடுக்கண் அழியாமை

10. *இடும்பைக்கு இடும்பை படுப்பர் இடும்பைக்கு*
*இடும்பை படாஅ தவர்.**

பொருள் : துன்பம் வந்தபோது வருந்திக் கலங்காதவர், அந்தத் துன்பத்திற்கே துன்பம் உண்டாக்கி அதனை வென்றுவிடுவர்.

அணி : சொற்பொருள் பின்வருநிலை அணி

எடுத்துக்காட்டு உவமை அணி (குறள் எண்: 3)

உவமை ஒரு தொடராகவும் உவமேயம் ஒரு தொடராகவும் வந்து, உவம உருபு மறைந்து வந்தால் அஃது எடுத்துக்காட்டு உவமை அணி எனப்படும்.

தோண்டும் அளவிற்கு ஏற்ப, மணற்கேணியில் நீர் ஊறும் என்பது உவமை. கற்கும் அளவிற்கு ஏற்ப, அறிவு வளரும் என்பது உவமேயம். இவற்றுக்கு இடையில் உவம உருபு மறைந்து வந்துள்ளது. இவ்வாறு உவமையும் உவமேயமும் வெளிப்படையாக இடம்பெற்று, உவம உருபு மறைந்து வந்துள்ளதால், இக்குறளில் அமைந்துள்ளது எடுத்துக்காட்டு உவமை அணி ஆகும்.

சொற்பொருள் பின்வருநிலை அணி (குறள் எண்: 10)

ஒரு செய்யுளில் ஒரே சொல் மீண்டும் மீண்டும் வந்து, ஒரே பொருளைத் தந்தால் அது சொற்பொருள் பின்வருநிலை அணி ஆகும்.

இக்குறளில் இடும்பை என்னும் சொல், துன்பம் என்னும் ஒரே பொருளில் மீண்டும் மீண்டும் வந்துள்ளது. எனவே, இக்குறளில் அமைந்துள்ளது சொற்பொருள் பின்வருநிலை அணியாகும்.

7th Std - Tamil_2025_Term_II_Unit 2.indd 41 6/6/2025 12:29:55 PM



மதிப்பீடு

சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ தீமை உண்டாகும்.

   அ) செய்யத்தகுந்த செயல்களைச் செய்வதால்

   ஆ) செய்யத்தகாத செயல்களைச் செய்யாமல் இருப்பதால்

   இ) செய்யத்தகுந்த செயல்களைச் செய்யாமல் இருப்பதால்

   ஈ) எதுவும் செய்யாமல் இருப்பதால்

2. தன்குடியைச் சிறந்த குடியாகச் செய்ய விரும்புபவரிடம் _ _ _ _ _ _ இருக்கக் கூடாது.

   அ) சோம்பல் ஆ) சுறுசுறுப்பு

   இ) ஏழ்மை ஈ) செல்வம்

3. 'எழுத்தென்ப' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது _ _ _ _ _ _ _ _ _.

   அ) எழுத்து + தென்ப ஆ) எழுத்து + என்ப

   இ) எழுத்து + இன்ப ஈ) எழுத் + தென்ப

4. 'கரைந்துண்ணும்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது _ _ _ _ _ _ _ _ _.

   அ) கரைந்து + இன்னும் ஆ) கரை + துண்ணும்

   இ) கரைந்து + உண்ணும் ஈ) கரை + உண்ணும்

5. கற்றனைத்து+ ஊறும் என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் _ _ _ _ _ _ _.

   அ) கற்றனைத்தூறும் ஆ) கற்றனைதூறும்

   இ) கற்றனைத்தீறும் ஈ) கற்றனைத்தோறும்

பொருத்துக.

1. கற்கும் முறை – செயல்
2. உயிர்க்குக் கண்கள் – காகம்
3. விழுச்செல்வம் – பிழையில்லாமல் கற்றல்
4. எண்ணித் துணிக – எண்ணும் எழுத்தும்
5. கரவா கரைந்துண்ணும் – கல்வி

குறுவினா

1. 'நன்மை செய்வதிலும் தீமை உண்டாகும்' எப்போது?
2. தீமை உண்டாக்கும் இரண்டு செயல்களை எழுதுக.
3. துன்பத்திற்குத் துன்பம் உண்டாக்குபவர் யார்?
4. எடுத்துக்காட்டு உவமை அணி என்றால் என்ன?

7th Std - Tamil_2025_Term_II_Unit 2.indd 42 6/6/2025 12:29:55 PM

திருக்குறள்

எளிய உரை – டாக்டர் வ.சுப. மாணிக்கனார்

40. கல்வி

1. *கற்க கசடறக் கற்பவை கற்றபின்*
நிற்க அதற்குத் தக.

2. *எண்என்ப ஏனை எழுத்துஎன்ப இவ்விரண்டும்*
கண்என்ப வாழும் உயிர்க்கு.

3. *கண்உடையர் என்பவர் கற்றார் முகத்துஇரண்டு*
புண்உடையர் கல்லா தவர்.

4. *உவப்பத் தலைக்கூடி உள்ளப் பிரிதல்*
அனைத்தே புலவர் தொழில்.

5. *உடையார்முன் இல்லார்போல் ஏக்கற்றும் கற்றார்*
கடையரே கல்லா தவர்.

6. *தொட்டனைத்து ஊறும் மணற்கேணி மாந்தர்க்குக்*
கற்றனைத்து ஊறும் அறிவு.

7. *யாதானும் நாடாமால் ஊராமால் என்னொருவன்*
சாந்துணையும் கல்லாத வாறு.

8. *ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவற்கு*
எழுமையும் ஏமாப்பு உடைத்து.

9. *தாம்இன் புறுவது உலகுஇன் புறக்கண்டு*
காமுறுவர் கற்றறிந் தார்.

10. *கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு*
மாடல்ல மற்றை யவை.

40. கல்வி – எளிய உரை

1. கற்கத்தக்க நூல்களைத் தெளிவாகக் கற்க;
கற்றபின் தக்கபடி வாழ்வில் நிற்க.

2. எண்ணும் எழுத்தும் ஆகிய இரண்டும்
வாழ்வார்க்குக் கண்கள் என்பர்.

3. கற்றோர்க்கே கண் உண்டு; கல்லாதவர்க்கோ
முகத்தில் இரண்டு புண் உண்டு.

4. மகிழுமாறு பழகுவர்; நினைக்குமாறு பிரிவர்;
இதுவே புலவரின் பண்பு.

5. செல்வர் முன் வறிவர்போல ஏக்கத்தோடு
படித்தவரே மேல்; படியாதவர் கீழ்.

6. மணற்கேணி தோண்டத் தோண்ட நீர் ஊறும்;
நூல்கள் கற்கக்கற்க அறிவூறும்.

7. எந்நாடும் தன்னாடாம்; எவ்வூரும் தன்னூராம்;
ஏன் ஒருவன் சாகும்வரை படிப்பதில்லை?

8. ஒரு பிறப்பில் படித்த படிப்பு ஒருவர்க்கு
எழுபிறப்பிலும் வந்து உதவும்.

9. தன்னின்பம் உலக இன்பம் ஆதலின், கற்றவர்
கல்வியை மேன்மேலும் காதலிப்பர்.

10. அழியாத சிறந்த செல்வம் கல்வியே;
பிறபொருள்கள் செல்வம் அல்ல.

47. தெரிந்து செயல்வகை

1. *அழிவதூஉம் ஆவதூஉம் ஆகி வழிபயக்கும்*
ஊதியமும் சூழ்ந்து செயல்.

2. *தெரிந்த இனத்தொடு தேர்ந்தெண்ணிச் செய்வார்க்கு*
அரும்பொருள் யாதொன்றும் இல்.

3. *ஆக்கம் கருதி முதலிழக்கும் செய்வினை*
ஊக்கார் அறிவுடை யார்.

4. *தெளிவு இலதனைத் தொடங்கார் இளிவுஎன்னும்*
ஏதப்பாடு அஞ்சு பவர்.

5. *வகையறச் சூழாது எழுதல் பகைவரைப்*
பாத்திப் படுப்பதோர் ஆறு.

6. *செய்தக்க அல்ல செயக்கெடும் செய்தக்க*
செய்யாமை யானும் கெடும்.

7. *எண்ணித் துணிக கருமம் துணிந்தபின்*
எண்ணுவம் என்பது இழுக்கு.

8. *ஆற்றின் வருந்தா வருத்தம் பலர்நின்று*
போற்றினும் பொத்துப் படும்.

9. *நன்றுஆற்ற லுள்ளும் தவறுண்டு அவரவர்*
பண்பறிந்து ஆற்றாக் கடை.

10. *எள்ளாத எண்ணிச் செயல்வேண்டும் தம்மொடு*
கொள்ளாத கொள்ளாது உலகு.

47. தெரிந்து செயல்வகை – எளிய உரை

1. அழிவதும் ஆவதும் பின் வரும் ஊதியமும்
எல்லாவற்றையும் எண்ணிச் செய்க.

2. சேர்ந்தவர்களைக் கலந்து செய்பவர்க்குச்
செய்ய இயலாதது ஒன்றுமே இல்லை.

3. வருவதை நம்பி உள்ளதை இழக்கும்
காரியத்தில் ஈடுபடார் அறிவு இருப்பவர்.

4. வெட்க உணர்ச்சிக்கு அஞ்சுகின்றவர்
விளங்காத காரியத்தை மேற்கொள்ளார்.

5. உட்கூறுகள் தெரியாது செய்யப் புறப்படுதல்
பகைவர் வெற்றிக்குப் பாத்தி பிடிப்பதாகும்.

6. செய்ய வேண்டாதன செய்தாற் கெடுவான்;
வேண்டியன செய்யாவிட்டாலும் கெடுவான்.

7. நன்றாக நினைத்துக் காரியத்தில் இறங்குக;
இறங்கியபின் பார்க்கலாம் என்பது தவறு.

8. முறைப்படி உழையாத உழைப்பு
பலர்துணை இருப்பினும் ஓட்டைபடும்.

9. அவரவர் இயல்பு அறிந்து செய்யாவிடின்
நன்மை செய்வதும் தவறாகி விடும்.

10. உன் நிலைக்கு ஏற்காததை உலகம் ஏற்காது;
உலகம் இகழாதவற்றை எண்ணிச் செய்க.

7th Std - Tamil_2025_Term_II_Unit 2.indd 43 6/6/2025 12:29:55 PM

53. சுற்றம் தழாஅல்

1. *பற்றற்ற கண்ணும் பழைமைபா ராட்டுதல்*
   சுற்றத்தார் கண்ணே உள.
2. *விருப்புஅறாச் சுற்றம் இயையின் அருப்புஅறா*
   ஆக்கம் பலவும் தரும்.
3. *அளவளாவு இல்லாதான் வாழ்க்கை குளவளாக்*
   கோடுஇன்றி நீர்நிறைந் தற்று.
4. *சுற்றத்தால் சுற்றப் படஒழுகல் செல்வம்தான்*
   பெற்றத்தால் பெற்ற பயன்.
5. *கொடுத்தலும் இன்சொலும் ஆற்றின் அடுக்கிய*
   சுற்றத்தால் சுற்றப் படும்.
6. *பெருங்கொடையான் பேணான் வெகுளி அவனின்*
   மருங்குடையார் மாநிலத்து இல்.
7. *காக்கை கரவா கரைந்துண்ணும் ஆக்கமும்*
   அன்னநீ ரார்க்கே உள.
8. *பொதுநோக்கான் வேந்தன் வரிசையா நோக்கின்*
   அதுநோக்கி வாழ்வார் பலர்.
9. *தமராகித் தன்துறந்தார் சுற்றம் அமராமைக்*
   காரணம் இன்றி வரும்.
10. *உழைப்பிரிந்து காரணத்தின் வந்தானை வேந்தன்*
    இழைத்திருந்து எண்ணிக் கொளல்.

53. சுற்றம் தழாஅல் – எளிய உரை

1. பற்றில்லாத போதும் பழைய உறவைப்
   போற்றுதல் சுற்றத்தாரிடமே உண்டு.
2. அன்பு குறையாத சுற்றம் இருப்பின்
   வளர்ச்சி குறையாத முன்னேற்றம் வரும்.
3. கலந்து பழகாதவன் வாழ்க்கை பெருகாது;
   குளம் கரையின்றி நீர் நிரம்புமா?
4. சுற்றத்தார் சுற்றி இருக்குமாறு உதவுவதே
   செல்வம் பெற்றால் பெறவேண்டும் பயன்.
5. கொடுத்தல் இன்சொல் இரண்டும் இருந்தால்
   சுற்றப்படை சூழ்ந்து விடும்.
6. கொடுப்பான் கடுகடுக்க மாட்டான் என்றால்
   அவன்போல் சுற்றமுடையார் உலகத்தில்லை.
7. காக்கை தன் சுற்றத்தை அழைத்து உண்ணும்;
   அப்பண்பினர்க்கே முன்னேற்றம் உண்டு.
8. அரசன் பொதுமையின்றிச் சிறப்பாக நோக்கின்
   அதனால் வாழும் சுற்றத்தார் பலர்.
9. கிளையாகிப் பிரிந்தவரும் அவர் உறவினரும்
   வெறுப்பு நீங்கியபின் விரும்பிவந்து கூடுவர்.
10. இருந்து பிரிந்து ஒரு நோக்கத்தோடு வந்தவனை
    அரசன் பொறுத்துப்பார்த்து ஏற்றுக் கொள்க.

61. மடி இன்மை

1. *குடியென்னும் குன்றா விளக்கம் மடியென்னும்*
   மாசுஊர மாய்ந்து கெடும்.
2. *மடியை மடியா ஒழுகல் குடியைக்*
   குடியாக வேண்டு பவர்.
3. *மடிமடிக் கொண்டொழுகும் பேதை பிறந்த*
   குடிமடியும் தன்னினும் முந்து.
4. *குடிமடிந்து குற்றம் பெருகும் மடிமடிந்து*
   மாண்ட உஞற்றி லவர்க்கு.
5. *நெடுநீர் மறவி மடிதுயில் நான்கும்*
   கெடுநீரார் காமக் கலன்.
6. *படியுடையார் பற்றமைந்தக் கண்ணும் மடியுடையார்*
   மாண்பயன் எய்தல் அரிது.
7. *இடிபுரிந்து எள்ளும்சொல் கேட்பர் மடிபுரிந்து*
   மாண்ட உஞற்றி லவர்.
8. *மடிமை குடிமைக்கண் தங்கின்தன் ஒன்னார்க்கு*
   அடிமை புகுத்தி விடும்.
9. *குடிஆண்மை யுள்வந்த குற்றம் ஒருவன்*
   மடிஆண்மை மாற்றக் கெடும்.
10. *மடிஇலா மன்னவன் எய்தும் அடிஅளந்தான்*
    தாஅயது எல்லாம் ஒருங்கு.

61. மடி இன்மை – எளிய உரை

1. குடும்பம் என்னும் அணையாத விளக்கு
   சோம்பல் என்னும் இருளால் அணைந்துவிடும்.
2. குடும்பம் சிறந்த குடும்பமாக விரும்புபவர்
   சோம்பலை அழித்து முயற்சியாக நடக்க.
3. சோம்பலை மடியிற் கொண்டிருக்கும் மடவன்
   பிறந்தகுடி அவனுக்குமுன் விரைந்தழியும்.
4. சோம்பலிற் பட்டுச் சுறுசுறுப்பு இல்லாதவர்க்குக்
   குடும்பமும் அழியும், குற்றமும் பெருகும்.
5. காலத்தாழ்வு, மறதி, சோம்பல், உறக்கம்
   இவை கெடுவார் ஆசைப்படும் நகைகள்.
6. நாடு ஆள்பவரின் நல்லுறவு இருப்பினும்
   சோம்பேறி பெரும்பயன் அடையான்.
7. சோம்பலில் ஆழ்ந்து நல்லுழைப்பை விட்டவர்
   பலரால் இடிபட்டு இகழப்படுவார்.
8. குடும்பத்தில் சோம்பல் குடிபுகுந்து விட்டால்
   பகைவர்க்கு அடிமையாகி விடுவோம்.
9. குடும்பம் நடத்துகையில் வந்த குறைபாடுகள்
   சோம்பலை ஒழிக்கவே நீங்கிப்போம்.
10. திருமால் தாண்டிய உலகம் முழுதும்
    சோம்பல் இல்லா மன்னவன் அடைவான்.

7th Std - Tamil_2025_Term_II_Unit 2.indd 44 6/6/2025 12:29:55 PM

63. இடுக்கண் அழியாமை

1. *இடுக்கண் வருங்கால் நகுக அதனை அடுத்துஊர்வது அஃதொப்பது இல்.*
2. *வெள்ளத்து அனைய இடும்பை அறிவுடையான் உள்ளத்தின் உள்ளக் கெடும்.*
3. *இடும்பைக்கு இடும்பை படுப்பர் இடும்பைக்கு இடும்பை படாஅ தவர்.*
4. *மடுத்தவாய் எல்லாம் பகடுஅன்னான் உற்ற இடுக்கண் இடர்ப்பாடு உடைத்து.*
5. *அடுக்கி வரினும் அழிவிலான் உற்ற இடுக்கண் இடுக்கண் படும்.*
6. *அற்றேம்என்று அல்லல் படுபவோ பெற்றேம்என்று ஓம்புதல் தேற்றா தவர்.*
7. *இலக்கம் உடம்புஇடும்பைக்கு என்று கலக்கத்தைக் கையாறாக் கொள்ளாதாம் மேல்.*
8. *இன்பம் விழையான் இடும்பை இயல்பென்பான் துன்பம் உறுதல் இலன்.*
9. *இன்பத்துள் இன்பம் விழையாதான் துன்பத்துள் துன்பம் உறுதல் இலன்.*
10. *இன்னாமை இன்பம் எனக்கொளின் ஆகும்தன் ஒன்னார் விழையுஞ் சிறப்பு.*

63. இடுக்கண் அழியாமை – எளிய உரை

1. துன்பம் வரும்போது கேலிசெய்க; அதுவே துன்பத்தைக் கடக்க வழி.
2. வெள்ளம் போன்ற நெருக்கடியும் அறிஞன் ஊக்கத்தினால் நினைக்கவே ஓடிப்போம்.
3. துன்பங் கண்டு துன்பப் படாதவர் துன்பத்தைத் துன்பப் படுத்துவர்.
4. கடினப்பாதை செல்லும் காளைபோன்றவனுக்கு வந்த துன்பமன்றோ துன்பப்படும்.
5. அடுக்கடுக்காக வரினும் அசையாதவனுக்கு வந்த துயரமன்றோ துயரப்படும்!
6. செல்வம் வந்தபோது பற்றற்று இருப்பவர் போனபோது துயரப் படுவாரோ?
7. இவ்வுடம்பு நோய்களுக்கு இலக்கு என்று இயல்பறிந்த மேலோர் கலக்கம் கொள்ளார்.
8. இன்பத்தை விரும்பாது இடையூற்றை இயல்பு என்று கருதுபவன் வருத்தம் அடையான்.
9. மகிழ்ச்சியில் மகிழ்ச்சி அடையாதவன் கவலையில் கவலை அடையான்.
10. துன்பத்தை இன்பமாகக் கருதுபவனுக்கு எதிரியின் மதிப்பும் கிடைக்கும்.

வான்புகழ் வள்ளுவரின் அறக்கருத்துகள் மாணவரிடம் சென்று சேர வேண்டும்; அதன்வழி நன்னெறிப் பண்புகள் மாணவரிடையே வளர வேண்டும் என்ற நோக்கில் புதிய பாடத்திட்டத்தில் திருக்குறளின் 150 பாக்கள் சேர்க்கப்பட்டுள்ளன.

- திருக்குறளை நாள்தோறும் வழிபாட்டுக் கூட்டத்தில் பொருளுடன் கூறலாம்.
- நாள்தோறும் ஒரு திருக்குறளைப் பொருளுடன் பள்ளியின் தகவல்பலகையில் காட்சிப்படுத்தலாம்.
- திருக்குறள் ஒப்பித்தல் போட்டியை வகுப்புவாரியாக நடத்தலாம்.
- திருக்குறள் கலைவிழாக்கள், ஓவியக் கண்காட்சிகள், நாடக விழாக்கள், குறளின் பொருளை வாழ்வியல் அனுபவங்களோடு பொருத்துதல், குறளை இசையமைத்துப் பாடுதல் போன்ற நிகழ்வுகளைப் பள்ளிகளில் ஒருங்கிணைக்கலாம்.
- இலக்கிய மன்றக் கூட்டங்களில் குறட்பாக்கள் தொடர்பான கதைகள் சொல்லலாம்; நாடகங்களை நடத்தலாம்.
- குறட்பாக்கள் தொடர்பான வினாக்களைத் தொகுத்து " வினாடி வினா" நடத்தலாம்.
- சான்றோர் வாழ்வில் நிகழ்ந்த சுவையான நிகழ்ச்சிகள் மூலம் திருக்குறள் கருத்துகளை விளக்கலாம்.
- பள்ளி சார்ந்த அழைப்பிதழ்கள், பாராட்டுச் சான்றிதழ்களில் திருக்குறளை அச்சிட்டு வழங்கலாம்.
- உலகப் பொதுமறையாம் திருக்குறளில் இடம்பெற்றிருக்கும் நன்னெறிக் கருத்துகளின் அடிப்படையில் நீதிக்கதைகள், இசைப்பாடல்கள், சித்திரக் கதைகள், அசைவூட்டப் படங்கள் வாயிலாகத் திருக்குறள் வளங்களை மாணவர்களிடம் கொண்டு சேர்க்கலாம்.

குறிப்பு: மாணவர்கள் எளிதில் படித்துப் புரிந்துகொள்வதற்கு ஏற்றவகையில் குறட்பாக்களின் சொற்கள் பிரித்துத் தரப்பட்டுள்ளன; அலகிடுவதற்கு அன்று.

7th Std - Tamil_2025_Term_II_Unit 2.indd 45 6/6/2025 12:29:55 PM

ஏழாம் வகுப்பு – தமிழ்

ஆக்கம்

பாட வல்லுநர் குழு

முனைவர் நா. அருள்முருகன்
இணை இயக்குநர்,
ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி, சென்னை.

முனைவர் இராம. பாண்டுரங்கன்
இணை இயக்குநர், (பணிநிறைவு),
மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம்,
சென்னை.

மேலாய்வாளர் குழு

முனைவர் பொன். குமார்
இணை இயக்குநர்,
மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம்,
சென்னை.

திருமதி ஏ.எஸ். பத்மாவதி
எழுத்தாளர், சென்னை.

முனைவர் து. கணேசமூர்த்தி
முதன்மைக்கல்வி அலுவலர், சேலம் மாவட்டம்.

முனைவர் பூந்துறையான் இரத்தினமூர்த்தி
முதுநிலை ஆசிரியர் (பணி நிறைவு),
கள்ளிப்பட்டி, ஈரோடு மாவட்டம்.

முனைவர் ப. கல்பனா
இணைப்பேராசிரியர்,
பாரதி மகளிர் கல்லூரி (தன்னாட்சி), பாரிமுனை, சென்னை.

முனைவர் சு. தாமரைப்பாண்டியன்
உதவிப் பேராசிரியர்,
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை.

பாடநூல் ஒருங்கிணைப்பு

முனைவர் மு. தீபாஞ்சி
துணை இயக்குநர்,
மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம், சென்னை.

திருமதி மு. செல்வி
பட்டதாரி ஆசிரியர், அரசு மேல்நிலைப் பள்ளி, காட்டூர், மீஞ்சூர் ஒன்றியம்,
திருவள்ளூர் மாவட்டம்.

கலை மற்றும் வடிவமைப்புக்குழு

ஓவியம் மற்றும் ஒளிப்படம்

திரு க.த. காந்திராஜன்
ஆய்வு வளமையர், தமிழ் இணையக் கல்விக் கழகம், சென்னை.

திரு. கே. புகழேந்தி
பட்டதாரி ஆசிரியர், அரசு மேல்நிலைப் பள்ளி, கரம்பக்குடி,
புதுக்கோட்டை மாவட்டம்.

திரு. அ. ஜெம்ஸ்பாண்ட்
ஓவிய ஆசிரியர், அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளி, அறந்தாங்கி,
புதுக்கோட்டை மாவட்டம்.

திரு. சி. தெய்வேந்திரன்
ஓவிய ஆசிரியர், அரசு உயர் நிலைப் பள்ளி, மாங்குளம்,
மதுரை மாவட்டம்.

திரு. கா. தனஸ் தீபக் ராஜன், ஓவியர்
திரு. கா. நளன் நான்சி ராஜன், ஓவியர்

பக்க வடிவமைப்பாளர்

பழையவலம் பா. இராமநாதன்
சென்னை.

தரக் கட்டுப்பாடு

திரு. இரா. மனோகர்
திரு. வே.சா. ஜாண்ஸ்மித்
கி. ஜெரால்டு வில்சன்

அட்டைப்படம்

திரு. கதிர் ஆறுமுகம்

ஒருங்கிணைப்பு

திரு. ம. அமல்ராஜ்

பாடநூலாசிரியர் குழு

திரு. மு. சேகரன்
விரிவுரையாளர், மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம்,
பெருந்துறை, ஈரோடு மாவட்டம்.

திரு. நி. சிவக்குமார்
விரிவுரையாளர், மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம்,
குமுளூர், திருச்சி மாவட்டம்.

திரு. கு. சம்பந்தம்
முதுநிலை ஆசிரியர் (பணிநிறைவு)
டி.ஆர்.பி.சி.சி.சி. இந்து மேல்நிலைப் பள்ளி, திருவள்ளூர்.

திரு. சிவ. முரளி
பட்டதாரி ஆசிரியர், ஜே.எப்.மேல்நிலைப் பள்ளி, புலிவலம்,
திருச்சி மாவட்டம்.

திரு. த. ஜீவானந்தம்
பட்டதாரி ஆசிரியர், ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி,
சிட்டம்பட்டி, மதுரை கிழக்கு ஒன்றியம், மதுரை மாவட்டம்.

முனைவர் ப. மெய்யப்பன்
ஆசிரியப் பயிற்றுநர், வட்டார வளமையம், பவானிசாகர்,
ஈரோடு மாவட்டம்.

திருமதி நா. ஜானகி
பட்டதாரி ஆசிரியர், அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளி,
சின்னத்தடாகம், கோவை மாவட்டம்.

திரு. வெ. பாலமுருகன்
பட்டதாரி ஆசிரியர், அரசு மேல்நிலைப் பள்ளி, ஆரம்பாக்கம்,
திருவள்ளூர் மாவட்டம்.

திருமதி ப. செந்தில் குமாரி
பட்டதாரி ஆசிரியர், ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி,
முதல்மைல், கூடலூர், நீலகிரி மாவட்டம்.

புலவர் க. சிவகுமார்
பட்டதாரி ஆசிரியர், அரசு மாதிரி மேல்நிலைப் பள்ளி, ஏலாக்குறிச்சி,
அரியலூர் மாவட்டம்.

திரு. ம. மீனாட்சி சுந்தரம்
பட்டதாரி ஆசிரியர், அரசு மேல்நிலைப் பள்ளி, சருகுவலையபட்டி,
மதுரை மாவட்டம்.

திரு. மா. பழனி
தலைமை ஆசிரியர், ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி,
சின்னப்பள்ளத்தூர், பென்னாகரம், தருமபுரி மாவட்டம்.

திரு. வே. செந்தில்சிவகுமார்
பட்டதாரிஆசிரியர், அரசு உயர்நிலைப் பள்ளி, பொட்டல்புதூர்,
திருநெல்வேலி மாவட்டம்.

திரு. ஜே. ஆரோக்ய டொமினிக்ராஜ்
பட்டதாரி ஆசிரியர், கார்மல் மேல்நிலைப் பள்ளி, நாகர்கோவில்,
கன்னியாகுமரி மாவட்டம்.

விரைவுக் குறியீடு மேலாண்மைக் குழு

திரு. இரா. ஜெகநாதன்
இடைநிலை ஆசிரியர், ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி,
கணேசபுரம்- போளூர்,
திருவண்ணாமலை மாவட்டம்.

திரு. ந. ஜெகன்
பட்டதாரி ஆசிரியர், அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளி,
உத்திரமேரூர், காஞ்சிபுரம்.

திருமதி ஆ. தேவி ஜெஸிந்தா
அரசு உயர்நிலைப் பள்ளி, என்.எம். கோவில், வேலூர்.

7th Std - Tamil_2025_Term_II_Unit 2.indd 46 6/6/2025 12:29:55 PM

7th English



Term 2

7th_English_Term_2_Cover.indd 77 6/23/2021 5:07:33 PM


PREFACE

The English textbook for standard VII has been prepared following the guidelines given in the National Curriculum Framework, 2005. It has been created to make English language learning, both effective and enjoyable. The aim has been to balance learning the structures and vocabulary of the language, with learning their use, in everyday life.


The activities have been graded carefully to allow a gradual building of language proficiency. The lessons provide effective individual and collaborative learning in pairs and groups and enable differentiation in multilevel classrooms. Each unit focuses on the themes of natural and social world to stimulate curiosity and imagination, engaging both heart and mind. An ICT Corner has been introduced in each unit for the first time in a State Board Text Book to develop current digital literacy skills.

How to use the book

- The Second Term English Book for Standard VII has two units and one play.
- Each unit is planned for a month.
- First two units are divided into **sections** and the third one is combined as it's a speech. Each section is designed to initiate and sustain the **Active Learning** process.


CONTENT

Sl. No.	Units	Page No.
1		
Prose	Adventures of Don Quixote	
Poem	The Poem of Adventure	
Supplementary	Alice in Wonderland	
2		
Prose	The Last Stone Carver	


Warm Up

Look at the pictures. Name the activities.

Discuss and Answer

- The **pictorial warm up page will help activate students own knowledge and ideas of the** topic.
- **The digital warm up** can be used for visualizing the theme to motivate and interest learners.


- **In-Text questions** in each section can be used for discussion and to check and develop comprehension skills.
- **Digital glossary** can be used to listen to correct pronunciation and visualise words.
- The **'Do You Know?'** box can be used to enhance general knowledge while initiating spoken language.


GLOSSARY

knights	-	
incredible	-	
hilarious	-	
ogres	-	
combat	-	
prodigious	-	
steeds	-	
spurs	-	

7th English Preface Term 2.indd 78 12-09-2022 1.15.40 PM

- The illustrations in Picto Grammar will make understanding of grammar easy.
- Digital Grammar Games can be used to reinforce learning to encourage students to play and learn easily.
- Language Check Point can highlight points of usage to avoid the common mistakes.




CREATIVE WRITING

Concrete Poems

Concrete poems are made up of words that have been placed in such a way that they make the shape of an object and also use words to describe the object.

Start by making a simple outline of the shape or object (an animal, a football, a fruit etc.) large enough to fill a piece of paper.


Then brainstorm a minimum of ten words and phrases that describe the shape. List action and feeling words as well.

Next, place a piece of paper over the shape and decide where your words are going to be placed so that they outline your shape but also fit well together.


Separate words and phrases with commas.

- Students can be taken through all the steps of writing with the help of pictures and prompts.
- Creative writing can be used to bring out their imaginative skill.
- Students can be encouraged to present or display their writings in the class.

- The warm up picture given at the begining of each section can be used to discuss the theme of the poem.
- The focus should be on the enjoyment of the poem through exploring imaginary skills & rhythm.
- The supplementary section encourages extensive reading and appreciation of literature.


Listen to the teacher read this section.

The young man flung the hammer and the chisel to the ground and cried, "I'm


CONNECTING TO SELF

Tackling the Issues


Ask the class to discuss solutions to an issue that plagues contemporary society at large or just your community—for example, homelessness, violence, environmental degradation, hunger.

Half the class should mention idealistic solutions to the chosen issue; the other half should mention only realistic approaches to solving the problem.

See if, in listening to both sides, someone can come up with a proposal that is both realistic and unconventional—an idea that hasn't been tried yet.

- Connecting to Self is based on the values of each lesson.
- Project is meant for working in groups and to develop collaborative learning.
- The development of higher order thinking skills is facilitated by the Steps to Success.

- Students can be encouraged to extend their reading activity through learning links section.
- Students can be helped to download the games and install them.
- The activities in ICT Corner will ensure learning language skills through websites and app links.


ICT CORNER

GRAMMAR – DEGREES OF COMPARISON

- To learn and practise the three forms of adjectives.
- To know and practise about the rules while comparing the adjectives.

Steps

1. Type the URL link given below in the browser or scan the QR code.
2. You can see the home page of the interactive game of Adjectives.

7th English Preface Term 2.indd 79 12-09-2022 1.15.42 PM

Learning Outcomes

- Promotes reading and vocabulary skills.
- Promotes use of higher-level thinking skills.
- Promotes creative writing
- Develops drawing skill
- Encourages to create comic strips
- Helps to visualise things
- Listens to the teacher reading out the material and gathers information from it.
- Reads aloud the stories and recites poems with appropriate pause, information and pronunciation.
- Answers questions orally and in writing after reading the text.
- Thinks critically, compares and contrasts character, enters, ideas, themes and relates them to life.
- Shares his/her experiences on his/her visit to art exhibition in writing.
- Summarizes orally and in writing the given text.
- Locates details, sequence of ideas and indentify the main idea.
- Understands the rules of grammar through a variety of situations and pictures and uses them in real life situations.
- Infers the meaning of unfamiliar words by reading there in context.
- Refers a dictionary to find the meaning of new words while reading and writing.

7th English Contents Term 2.indd 80 12-09-2022 1.14.24 PM

CONTENT

Unit No.	Title	Page No.	Month
1			
Prose	Adventures of Don Quixote	52	October
Poem	The Age of Chivalry	71	
Supplementary	Alice in Wonderland	76	
2			
Prose	The Last Stone Carver	83	November
Poem	Wandering Singers *	96	
Supplementary	Naya – The Home of Chitrakaars	100	

E-Book

WUAVP

Assessment

YBUNS

7th English Contents Term 2.indd 82 12-09-2022 1.14.24 PM

1 Adventures of Don Quixote

Prose

Warm Up

W73PU

My Hand of Imagination

1. Trace around your hand on a white paper.
2. Make list of your five choices.
3. Draw a picture to indicate what would your finger becomes.
4. Erase one to finger at a time and draw your choice in it's place.
5. Write and share in the class.



7th English Unit 1 Term 2.indd 82 12-09-2022 1.16.44 PM

Adventures of Don Quixote



Once upon a time, in a village called La Mancha, in Spain, there lived a man who loved to read about **knights**. Every day he would read about courageous knights and the **incredible** adventures they had. He was so absorbed in these stories that he hardly remembered to eat or sleep. The days of Knight and Squires, of exciting adventures and romances come alive in the **hilarious** account of Don Quixote's travels. As years passed, Don Quixote imagines himself placed in the world of knights. He convinces Sancho Panza, a peasant from the same village, to be his squire.

7th English Unit 1 Term 2.indd 83 12-09-2022 1.16.46 PM



7th English Unit 1 Term 2.indd 84 12-09-2022 1.16.47 PM




7th English Unit 1 Term 2.indd 85 12-09-2022 1.16.48 PM



7th English Unit 1 Term 2.indd 86 12-09-2022 1.16.49 PM



7th English Unit 1 Term 2.indd 87 12-09-2022 1.16.51 PM



7th English Unit 1 Term 2.indd 88 12-09-2022 1.16.52 PM



7th English Unit 1 Term 2.indd 89 12-09-2022 1.16.54 PM



7th English Unit 1 Term 2.indd 90 12-09-2022 1.16.56 PM

GLOSSARY

knight	-	**a man who served his lord as a mounted soldier in armour.**
incredible	-	**unbelievable**
hilarious	-	**amusing, entertaining**
ogre	-	**monster, giant**
combat	-	**fighting between armed forces**
prodigious	-	**impressively great in extent**
steed	-	**horse that is ridden**
spur	-	**a device with a small spike or a spiked wheel that is worn on a rider's heel and used for urging a horse forward.**

READ AND UNDERSTAND

Answer the following questions.

1. What kinds of books did Don Quixote like to read? What were those books like?
2. What effect do the things Don Quixote reads have on him?
3. Why didn't Don Quixote believe Sancho Panza when Sancho told him the ogres were actually windmills?
4. Why do you think Sancho continued to journey on with Don Quixote after the windmill incident?
5. When Don Quixote sees the cloud of dust on the plain in the distance, what does he think causes it?
6. Sancho sees two clouds of dust, leading him to conclude that there are two armies. What does Don Quixote think will happen next?
7. What is the reaction of the shepherds when they see that Don Quixote is attacking their sheep?

Think and Do

1. Most people associate windmills with Holland, rather than Spain. Use the encyclopaedia and any other sources you might have to find out more about windmills and their traditional and modern uses. Then, make a model of a windmill to display with the results of your research.

7th English Unit 1 Term 2.indd 91 12-09-2022 1.16.56 PM

2. Draw a design of a boat that skims trash off the surface of a river, lake, or ocean. Label the parts and give your invention a catchy name.

- ★ What kind of vessel could do the job?
- ★ What parts would it have?
- ★ How would it move?
- ★ How could it tell the difference between trash and other objects, such as animals and seaweed?
- ★ How would it store and dump the trash?
- ★ Could your machine double as a beach sweeper, sifting trash from sand?

Discuss and Answer

To Dream the Impossible Dream

Don Quixote might be seen as not simply crazy in his refusal to see things as they really are but more like a person who wants to accomplish a greater good and so refuses to compromise his ideals. Examples of such people include Nelson Mandela, Mahatma Gandhi, and Martin Luther King Jr.

Discuss (with examples and other evidence) whether or not they think Quixote deserves to be put in the company of real-world idealists or is merely delusional.

VOCABULARY



Homophones are two words that are spelled differently but have the same sound.

A. Explain the difference between these words by making sentences. One is done for you.

1. see/sea - Can you ***see*** the birds flying over the ***sea***?
2. knight/night - ----------.
3. right/write - ----------.
4. arms/alms - ----------.
5. fair/fare - ----------.
6. here/hear - ----------.
7. heard/herd - ----------.

7th English Unit 1 Term 2.indd 92 12-09-2022 1.16.56 PM

8. our/hour - ----------.

9. no/know - ----------.

10. not/knot - ----------.

B. Read the following sentences and write the meaning of the italicised words. One is done for you.

Homonyms are spelled the same way but differ in meaning.

1. She rose up to receive the rose garland.

rose - got up

rose - a flower

2. There is a *fair* Arts and Craft *fair* this weekend.

fair - ----------

fair - ----------

3. The woodcutter *saw* a huge *saw* in his dream.

saw - ----------

saw - ----------

4. Write the *right* answers on the *right* side.

right - ----------

right - ----------

5. The *well* was dug by a *well*-known king.

well - ----------

well - ----------

6. We have *march* past in *March*.

march - ----------

march - ----------

7. *Can* you get me a *can*?

can - ----------

can - ----------

7th English Unit 1 Term 2.indd 93 12-09-2022 1.16.56 PM

8. How long will the *live* fish *live* without food?

live - ----------

live - ----------

9. She has *tears* in her eyes as she *tears* old photos.

tears - ----------

tears - ----------

10. I will be *second* in line if I wait one more *second*.

second - ----------

second - ----------

C. Divide each word by putting a slash (/) symbol between each syllable. On the space provided, write how many syllables each word has. Use a dictionary if you're not sure where to divide the syllables.

Syllable is a unit of pronunciation having one vowel sound, with or without surrounding consonants, forming the whole or a part of a word; for example, there are two syllables in water. Wa/ter

1. adventure - ad/ven/ture - 3 syllables
2. courageous - ----------
3. incredible - ----------
4. knight - ----------
5. hilarious - ----------
6. excitement - ----------
7. peasant - ----------
8. imagine - ----------
9. shepherd - ----------
10. entreat - ----------

7th English Unit 1 Term 2.indd 94 12-09-2022 1.16.56 PM

LISTENING

60WMP

D. Listen to your teacher reading a passage on Adventure Trips. Visualize the activities. Draw the scenes in the given boxes.

WATER ACTIVITIES

BONFIRE

ROCK CLIMBING

MOUNTAIN BIKING

SPEAKING

E. Read the conversation of the simple machines. Take roles to play. Then discuss in pairs to describe any simple machine. Create your own story board and take roles to play.

Jack : Don't you know how simple machines make your life easy?

Jimmy : Um... I don't know what simple machines are.

*** Text for listening is in page 136**

7th English Unit 1 Term 2.indd 95 12-09-2022 1.16.56 PM

Jack : Simple machines are mechanical devices for applying force like a wedge or ramp.

Jimmy : Oh! wow! How I did not know this!

Jack : Like the wheels on hospital bed and IV pole. They help you move people faster by reducing the friction.

Jimmy : Is the stick over there that the TV is attached to, is that a simple machine too?

Jack : Yes it is, it's a lever. The wheels on the bus are simple machines, they make the bus move.

Jimmy : What about the doors?

Jack : Yeah, the driver pulls a lever and the doors open and you climb up the inclined plane aka the stairs. The cable in the elevator is wrapped around a groove in the wheel and axle, an electric motor pulls the cable, lifting the car between floors.

Jimmy : So the wheels on the rolling chair are too by rolling the chair back instead of lifting the chair back.

Jack : Yes, they are, they move the chair and reduce the friction.

F. Ask the students to tell a story. It may be a true story or an imaginative story. Choose one of the titles from the following.


- ❖ A time I was very late.
- ❖ A funny story about my friend.
- ❖ I met someone very interesting.
- ❖ An unusual event.
- ❖ A funny story about my life.

Think about your story

- ❖ When did it happen?
- ❖ Where were you?
- ❖ Who was there?
- ❖ What happened?

7th English Unit 1 Term 2.indd 96 12-09-2022 1.16.56 PM

PICTO GRAMMAR




7th English Unit 1 Term 2.indd 97 12-09-2022 1.16.57 PM

USE GRAMMAR

3DSEH

G. Solve the crossword puzzle using superlative adjectives.

Down	Across
2.The ------- man ever whose age has been verified is Jiroemon Kimura.	1. Deserts are the ---------- places on Earth.
4. Antarctica is the --------- continent in the world.	3. Russia is the ---------- country in the world.
6. The elephant is the ------ animal in the world.	4. Mercury is the -------- planet to the sun.
8. Mount Everest is the ------- mountain in the world.	5. Vatican City is the ------ country in the world.
	6. Diamonds are the ------ material in the world.
	7. The cheetah is the ------ animal in the world.



7th English Unit 1 Term 2.indd 98 12-09-2022 1.16.57 PM

H. Put students in pairs and tell them to interview their partner. To do this they must make questions, e.g. What's the worst storm you've ever seen? They can also ask follow-up questions to find out more information. Do feedback on this as a whole class. Other thematic questionnaires of this kind could be:

Emotional experiences

- The most frightened I've ever been …
- The happiest I've ever been …
- The most nervous I've ever been …

Musical experiences

- The best song I've ever heard …
- The worst song I've ever heard …
- The longest time I've ever danced …

Places in your life

- The most dangerous place I've been in …
- The cheapest restaurant I've eaten in …
- The most boring town I've ever visited …

WRITING



I. Write a paragraph comparing Don Quixote and Sanchopanza. The following words will help you to write a compare and contrast paragraph.

Similarities	Differences
is similar to	on the other hand
both	however
also	but
too	in contrast to
as well	differs from
	while
	unlike

7th English Unit 1 Term 2.indd 99 12-09-2022 1.16.57 PM

CREATIVE WRITING

J. Local Historians

- ❖ Ask students to collect stories about their town from older people.
- ❖ Ask them to find out how the streets were named.
- ❖ Are there any interesting people or legends to which the street names refer?
- ❖ Are there any local places in town about which people tell stories?
- ❖ Any haunted houses?
- ❖ Let students find out when the town was found and by whom.
- ❖ Visit a local historical society to see old photographs or artefacts.

Let students create an original historical fiction:

Describe the town from the point of view of a fictitious citizen who might have lived in the town long ago. Include local issues of the time in the story. Write the story of the town from the fictionalized point of view of a resident who actually lived.

Language Check Point

		
☒ George is the smartest and intelligent staff of this company.	☑ George is the smartest and most intelligent staff of this company.	? When two degrees of adjectives are used, while the first one is superlative the second one also should be superlative.
☒ Kayal is more intelligent and smarter than Saral.	☑ Kayal is smarter and more intelligent than Saral.	? When both adjectives are in the same degree, adjective having 'more' must come after adjective having 'er'.
☒ It is my the best genre of music.	☑ It is my best genre of music.	? If any possessive pronoun or possessive case proceeds the superlative degree, then 'the' cannot be used.

7th English Unit 1 Term 2.indd 100 12-09-2022 1.16.57 PM

1 The Age of Chivalry

Poem


Warm Up

Look at the pictures. Name the activities.









Discuss and Answer.

1. What are the adventure activities of NCC?
2. When can you join the NCC?
3. What is the motto of NCC?

Think and Answer.

1. Why do we need adventure in life?

   _____

2. Do you like adventures? Why?

   _____

3. Why does NCC conduct the adventure activities?

   _____

7th English Unit 1 Term 2.indd 101 12-09-2022 1.16.58 PM

Back in the days of old
when knights were bold
who with a sword or **lance**
in armour sought romance.

It was the age of **chivalry**
long ago in man's history
when to fight for a righteous cause
one did gain considerable applause.

It was mainly for show, love and glory
they deemed themselves being worthy
to capture the heart of some fair maiden
which was the most desired prize laden.

Oh, they would strike heavy blows
on all of their opponents and foes
in a one to one combat defying death
as crowds watched with **abated** breath.

Yes, it was far back in those days of yore
that courage and strength came to the fore
where there was this life and death struggle;
such issues at hand the knights would juggle.







7th English Unit 1 Term 2.indd 102 12-09-2022 1.16.58 PM

And in fighting for their country, faith and king
noble **impressions** on people's minds would ring
that even through the ages are held in high esteem
those knights in shinning armour do now all seem.

There are many legends based on their heroic **exploits**
a legacy of tales which have been told with much **adroit**
highlighting aspects of human wisdom related to virtue and vice
and the lessons to be learnt are those of goodness and sacrifice.

History usually repeats itself time and again
as it often happens a situation comes when
we're asked to do something for a just cause
and acting with chivalry we shouldn't pause.

George Krokos

About the Poet

